பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 23 திங்கட்கிழமை (09-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:13

# வானொலி ஒலிபரப்பு சாதனங்கள் புலிகளுக்கு நோர்வே வழங்கியது?

## 'சண்டே ரைம்ஸ்' தகவல்

கொழும்பு,டிசெ.9

விடுதலைப் புலிகள் தங்களது உத தியோகபூர்வ வானொலி சேவையான புலிகளின்குரல் வானொலி சேவையை நவீன மயப்படுத்தி விரிவுபடுத்துவதற் காக ஆறு தொன் எடைகொண்ட உப கரணங்களை இறக்குமதி செய்வதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

கொழும்பில் நேற்று வெளியான 'சண்டே ரைம்ஸ்' வார இதழ் இந்தத் தகவலை முன்பக்கத் தலைப்புச் செய் தியாக வெளியிட்டிருக்கிறது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துவரப்பட்ட வானொலி உபகர ணங்களை கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி - விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாளன்று - புலிகளின் பிரதி நிதிகள் கொழும்பு துறைமுகத்தில் பொறுப்பேற்றனர். மறுநாள் அந்த உப கரணங்கள் பொதி செய்யப்பட்டு - 'சீல்' வைக்கப்பட்ட கொள்கலன் ஒன் றில் ஓர் இன்ஸ்பெக்டர் தலைமையி

(14ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் 3,500 பேர் ஒப்பமிட்ட மகஜர்

யாழ்ப்பாணம்,டிசெ.9

நெடுந்தீவை [illegible] கொண்டுள்ள ஈ.பி.டி.பியினரையும், கடற்படையினரை யும் வெளியேறுமாறு கோரி பொது மக்கள் 3,500 பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜர் பிரதமருக்கும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவுக்கும், வெளிநாட்டுத் தூதர கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட வுள்ளது.

நெடுந்தீவு பொது அமைப்புக் களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த மகஜர் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

## புலிகளால் பல சட்டப் பிரச்சினைகள்:

# சமாதான முயற்சிக்கு இந்தியா அதிக பங்களிப்புச் செய்யாது!

## வெளியில் இருந்தே ஆதரவு வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெம்பர்9

**இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா கூடுதலான பங்களிப்பு எதையும் செய்யாது.**

**விடுதலைப் புலிகள் தொடர்பான சில சட்டப் பிரச்சினைகளே அதற்குக் காரணம்.**

**கொழும்பு வந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் கன்வால் சிபல் இவ்வாறு வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.**

இரண்டுநாள் விஜயம் மேற்கொண்டு இங்கு வந்திருக்கும் அவர், நேற்று கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்ட லில் அமைச்சர் மிலிந்த மொறகொட வைச் சந்தித்துப் பேசியபிறகு இந்திய செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவித் ததாவது :-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கம் பயங்கரவாத இயக்கம் என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்த இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், முன்னாள் இந்தியப் பிர தமர் ராஜீவ் காந்திப் படுகொலை தொடர்பாக சட்டப்படி தேடப்பட்டுவரும் ஒருவர்.

இந்தச் சிக்கலால்தான் இலங்கை யின் சமாதான முயற்சிகளில் இந்தியா கூடுதலான பங்களிப்பு செய்யமுடியா மல் இருக்கிறது. பங்களிப்புச் செய்ய முடியாத நிலையிலும் சமாதான முயற் சிகளின் முன்னேற்றத்தை இந்தியா கவனித்துக் கொண்டே வருகின்றது. காரணம், இலங்கையின் சமாதான முயற்சியை இந்தியா ஆதரிக்கிறது.

இலங்கையின் சமாதானமுயற்சி களில் இருந்து இந்தியா தூர விலகி நிற்கிறது என்று கூறப்படுகிறது. அது தவறு. யுத்தம் செய்து கொண்டிருந்த இரு தரப்பினரும் சமஷ்டி முறையில் பிரச்சினைக்குத் தீர்வுகாண இணங் கிக் கொண்டார்கள். இலங்கை அரசும எதிர்க்கட்சியும் இது முன்னேற்றமான காரியம் என்கின்றன. இப்படியான நிலையில் இந்தியா வெளியில் சும்மா பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா?

கொள்கையளவில் இலங்கை யின் ஐக்கியம், ஜனநாயகம், மனித உரிமைகள், பல்லின மககளின் அரசி யல் ஆகியவை கவனத்தில் கொள் ளப்பட வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறது. இலங்கை அரசு அதைக் கவனமாகக் கேட்டுக்கொள்கிறது. இந் தியா வற்புறுத்தி வந்த இந்தக் கொள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வானொலி பற்றி வெளியுறவுச் செயலர் கருத்து

கொழும்பு,டிசெ.9

விடுதலைப் புலிகளுக்கு சக்தி வாய்ந்த வானொலி ஒலிபரப்பு சாத னங்கள் கிடைத்திருப்பதாக வெளி யாகியிருக்கும் தகவல் குறித்து நேற்று கொழும்பில் செய்தியாளர் ஒருவர் இந்திய வெளியுறவு செயலர் கன் வால் சிபலிடம் கேள்வி எழுப்பினர்.

புலிகள் தங்கள் வானொலி சேவையை இந்தியா முதல் சிங்கப் பூர் வரை விஸ்தரிக்கவுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இது குறித்து இந்தி யாவின் நிலைப்பாடு என்ன என்று அவரிடம் கேட்கப்பட்டது.

புலிகளின் எவ்எம் சேவை உண மையில் இந்தியாவரை செல்லுமா என் பது கேள்விக்குரியது. ஆயினும், அப் படி அது இந்தியாவரை விஸ்தரிக் கப்படுமாயின் அதனை நாங்கள் வேறு விதமாகக் கையாள வேண்டி வரும் - என்று அதற்கு பதிலளித்தார் வெளி யுறவுச் செயலர் கன்வால் சியல்.

## ஜனாதிபதியின் தூதுக்குழு ஜெயலலிதாவைச் சந்திக்கும்

கொழும்பு,டிசெ.9

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி யின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய உயர்மட்ட தூதுக்குழு ஒன்று விரைவில் தமிழ் நாட்டுக்குச் சென்று முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து அவருடன் பேச்சு நடத்த இருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் காவின் விசேட பிரதிநிதிகளாக கடந்த வாரம் புதுடில்லி சென்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்திவிட் டுத் திரும்பிய தூதுக்குழுவினரே மீண் டும் தமிழ்நாடு செல்லவுள்ளனர்.

சமாதான முயற்சிகள் என்ற பெய ரில் விடுதலைப் புலிகள் தனி அரசை மெல்ல மெல்ல நிறுவி வருவது குறித்த ஜனாதிபதியின் கவலையை இந்தி யத் தலைவர்களுக்கு தெரியப்படுத் தவும் -

இலங்கையில் என்ன நடந்தாலும் அது இந்தியாவுக்குத் தெரியப்படுத் தப்பட வேண்டும் ஏனெனில் அவற்றால் பாதிக்கப்படுவது இந்தியாதான் என் பதை விளக்குவதற்காகவும் .

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உயர்மட்டக் குழு இந்த விஜயங்களை

(14ஆம் பக்கம் பார்க்க)

# வீரப்பன் பிடியில் இருந்த நாகப்பா சடலமாக மீட்பு!

## காட்டில் நடந்த மோதலில் சிக்கி இறந்தாரா?

பெங்களூர் டிசெ.9

சுமார் மூன்று மாதகாலத்துக்கும் மேலாக நீடித்து வந்த கர்நாடக முன னாள் அமைச்சர் நாகப்பாவின் கடத் தல் நாடகம் துயரமாக முடிந்து போயி ருக்கிறது.

66 வயதான நாகப்பாவின் சடலம் கர்நாடக எல்லையில் அடர்ந்த காட் டின் நடுவே கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறது. நாகப்பா எவ்வாறு இறந்தார் என்பது உடனடியாகத் தெரியவில்லை. காட்டில் வீரப்பனுக்கும் விசேட அதிர டிப்படையினருக்கும் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் சிக்கி அவர் காயமடைந்தார் என்று ஒரு தகவல் வெளியாகியிருக்கிறது.

தமிழ்நாடு விசேட அதிரடிப்படை யினருடனான சண்டையில் நாகப்பா



காயமடைந்தார் என்ற தகவலை கடைசியாக அனுப்பிய ஒரு ஒலி நாடாவில் வீரப்பன் தெரிவித்திருப்ப தாக கூறப்படுகின்றது. எனினும், நாகப்பா தற்போது தன்னிடம் இல்லை என்றும் வீரப்பன் அந்த ஒலிநாடா வில் கூறியிருக்கின்றார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை பெங்களூருக்கு 100 கிலோ மீற்றர் தொலைவில் கர்நாடக வனப் பகுதியில் நாகப்பாவின் சடலத்தை கர்நாடக பொலீஸார் கண்டுபிடித்தனர்.

இதேவேளை -

வீரப்பன் ஒளிந்திருக்கும் காட்டுப் பகுதியில் தமிழக சிறப்பு அதிரடிப் படைக்கும் வீரப்பனுக்கும் இடையே மோதல்கள் எதுவும் நடைபெற வில்லை என்று தமிழக பொலீஸ் வட் டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பிரேத அறை கட்டுமானம்:

# ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு எந்தத் தொடர்பும் கிடையாது!

## பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.9


யாழ் ஆஸ்பத்திரிக்குள் இடம்பெற றுவரும் பிரேத அறைக்கான கட்டட வேலைகளுக்கும் ஆஸ்பத்திரி நிர் வாகத்துக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என்று யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் அறிவித்திருக்கிறார்.

புனர்வாழ்வு அமைச்சு ஒதுக்கிய நிதி மூலம் யாழ். அரச செயலகமே இந்தக் கட்டடப் பணிகளை நடை முறைப்படுத்தி வருகின்றது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் புதிய பிரேத அறைக்கான கட்டடத்தை நிறுவுவ தில் பெரும் நிதிமோசடி இடம்பெற்றி ருப்பதாக நேற்றைய உதயனின் முத லாம் பக்கத்தில் வெளியான செய்தி குறித்து அவர் இந்த விளக்கத்தை அளித்திருக்கிறார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



மாவீரர் நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆஸ்திரேலியாவின் மெல்பெர்ன் நகரில் மிகவும் உணர்வு பூர்வமாகவும் எழுச்சியுடனும் நடைபெற்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். ஆஸ்திரேலியத் தேசிய கொடியேற்றம், தமிழீழத் தேசியக் கொடியேற்றம் ஆகியவற்றைத் தொடர்ந்து விடுதலை தாகத்தையும், மாவீரர் தியாகத்தையும் விளக்கும் நடனங்கள் - மாவீரர் எழுச்சி கானங்கள் - கவியரங்கு - நாடகம் போன்றவை மிகச் சிறப்பாக நடைபெற்றன. தேசிய தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் நாள் உரை ஒளிநாடா மூலம் காண்பிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆஸ்திரேலியா நியூசிலாந்து பொறுப்பாளர் தி.ஜெயக்குமார் அவர்களும் சிட்னியில் இருந்து வருகை தந்த மாவீரர் மேஜர் டயஸின் (கந்தசாமி) சகோதரர் தனபால் அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள்.

சிறப்பு நிகழ்வாக தாயக விடுதலை பாடல்கள் அடங்கிய தாய்நிலத்து வேலி, வெற்றி முரசு இசைத்தட்டுகள் வெளியிடப்பட்டன. அந் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

# முஸ்லிம் காங்கிரஸ் விரிசல் வலுக்கிறது
# ரவூப்ஹக்கீமின் சவாலை ஏற்று அதாவுல்லா நிந்தவூரில் கூட்டம்

## குழப்பும் முயற்சிகளுக்கு இடையில் ஐந்தரை மணிநேரம் நடந்தது

நிந்தவூர்,டிசெ.9

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் போட்டியால் கட்சிக்குள் ஏற்பட்ட விரிசல் வலுக்கிறது. அதாவுல்லாவும் சுபைர்தீன் ஹாஜியாரும் முடியுமானால் கிழக்கு மக்கள் மத்தியில் கூட்டம் ஒன்றை நடத்திக்காட்டுவார்களா என்று ரவூப்ஹக்கீம் விடுத்த சவாலை அதாவுல்லா ஏற்றார். கடந்த சனிக்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 11 மணிவரை ஐந்தரை மணி நேரம் "தெளிவுபடுத்தும் எழுச்சிக் கூட்டம்" நடத்தினார்.

கூட்டத்துக்குச் செல்ல வேண்டாம் என்று நிந்தவூர் பள்ளிவாசல் ஒலி பெருக்கி ஒன்று ஒலித்தும், கூட்டத்தில் கல்லெறி விழுந்தும்கூட பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கூட்டத்துக்குச் சென்று இறுதிவரை இருந்துவிட்டே வீடு சென்றார்கள்.

அதேவேளை, ரவூப்ஹக்கீமும் கடந்த சனிக்கிழமை மூதூரில் கூட்டம் நடத்தினார். அதையடுத்து புத்தளத்திலும் கூட்டம் நடத்தினார்.

நிந்தவூர் கூட்டத்தில் அதாவுல்லா உரை நிகழ்த்துகையில், ரவூப்ஹக்கீம் நாடாளுமன்றத்தில் விடுத்த சவாலை ஏற்றே தாம் இக் கூட்டத்தைக் கூட்டியதாக சொன்னார். பெரும் எண்ணிக்கையான மக்கள் கூட்டத்துக்கு வந்திருந்ததைச் சுட்டிக்காட்டி தமது நியாயமான போராட்டத்தின் பக்கமே மக்கள் நிற்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

அதாவுல்லா பேசத் தொடங்கிய சிறிது நேரத்தில் மக்கள் குழுமியிருந்த ஒரு பகுதியில் எங்கிருந்தோ கற்கள் வந்து விழுந்ததால் சலசலப்பும் பரபரப்பும் ஏற்பட்டன. "ஒட்டகங்கள் ஓடிக் கொண்டிருக்கும் போது நாய்கள் குரைக்கத்தான் செய்யும், ஆனால், ஓடும் ஒட்டகங்களை அவற்றால் - அந்த நாய்களால் தடுத்து நிறுத்த முடியாது" என்று நகைச்சுவையாகக கூறினார்.

கூட்டத்தில் எஸ்.சுபைர்தீன், டாக்டர் ஏ.உதுமாலெவ்வை முதலானோரும் உரையாற்றினர்.

இந்தக்கூட்டம் பற்றிய அறிவித்தல் நிந்தவூரில் உள்ள வீதிகளில் எல்லாம் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்ட போது ஒலிபெருக்கி பொருத்தப்பட்டிருந்த 'பிக்கப்' வாகனம் கல்லெறிக்கு உள்ளாகியது. அதன் முன் கண்ணாடி நொறுங்கியது.

கூட்டத்துக்குச் செல்ல வேண்டாம என்று நிந்தவூரில் உள்ள ஒரு பள்ளிவாசலின் ஒலிபெருக்கிமூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கூட்டம் நடைபெற்ற பகுதியில் பிரதான வீதிகள் முஸ்லிம் காங்கிரஸின் பச்சை, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. முஸ்லிம் காங்கிரஸின் கட்சிப் பாடல்கள் ஒலி பரப்பப்பட்டன. (ஐ)

# ஹக்கீம் அதாவுல்லா சமாதானத்துக்கு வற்புறுத்து

"ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இன்றைய நெருக்கடி நிலையை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இருதரப்பும் (ஹக்கீம் - அதாவுல்லா) உடன் சமாதானத்திற்கு வர வேண்டும்."

- இவ்வாறு நேற்று கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட கிராம அமைப்பாளர்கள் சபையின் விசேட கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ், எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் ஆகியோா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

# சில தெற்கு அரசியல் வாதிகளின் கருத்துக்களால் சிங்கள மக்கள் ஏமாந்து விடக்கூடாது!

## ஒஸ்லோ மாவீரர் நாள் நிகழ்ச்சியில் அன்ரன் பாலசிங்கம்

ஒஸ்லோ,டிசெ.9

தென்பகுதியிலுள்ள சில அரசியல் வாதிகள் சமாதான நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கும் பல்வேறு கருத்துக்கள் காரணமாக சிங்கள மக்கள் ஏமாந்து விடக்கூடாது என்றும் சிங்கள மக்களின் பரிபூரண ஆதரவுடன சமாதான முயற்சிகளை வெற்றியடையச் செய்யவேண்டும் என்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

ஒஸ்லோவில் கடந்த சனியன்று நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய பொழுதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க நம்பகமான ஒரு தலைவர் என்பதாலேயே புலிகள் இயக்கம் சமாதானத் தீர்வில் பிரவேசித்திருக்கிறது.

சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமாகச் செல்வதற்கு நோர்வே அரசின் பங்களிப்பும், அனுசரணையும், மதிநுட்பமும், சாணக்கியமுமே முக்கிய காரணங்களாகும்.

நாம் பலத்துடன் சமத்துவமாக அரசுடன் பேசுவதற்கும் சர்வதேச அரங்கில் தலை நிமிர்ந்து நிற்பதற்கும் எமது ஆயிரமாயிரம் மாவீரர்களின் அர்ப்பணிப்பும் தியாகங்களுமே அடிப்படைக் காரணங்களாகும்.

அடுத்த கட்டப்பேச்சுக்கள் 2003 ஆம் ஆண்டு ஜனவரியில் தாய்லாந்தில் நடைபெறவிருக்கின்றன. அதற்கு அடுத்தகட்டப் பேச்சுக்களை ஜப்பானில் நடத்துவதற்கு அந்த நாடு அழைப்பு விடுத்துள்ளது. வடக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு உதவிபுரியவும் ஜப்பான் முன்வந்துள்ளது.

தென்னாபிரிக்காவில் சமாதானப் பேச்சுக்களை நடத்துமாறு தென்னாபிரிக்காவின் முன்னாள் விடுதலைப் போராட்டவீரர் நெல்ஸன் மண்டேலா அழைப்பு விடுத்துள்ளார். இரு தரப்பினரையும் நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடி பேச்சுக்களுக்கு ஊக்கம் தர அவர் விரும்பியிருக்கிறார்.

தமிழீழ விடுதலை புலிகள் நேர்மையாக இந்தப்பேச்சுக்களில் பங்கு கொண்டு சமாதானப் பாதையை உண்மையாகத் தழுவி நிற்பதை உலகம் அங்கீகரித்துள்ளது. உலக நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு நாளாந்தம் பெருகி வருகிறது. இன்றைய உலக அரசியல் நிலைவரம் முன்னர் இருந்ததைவிட வித்தியாசமானது. அநேக நாடுகள் மோதல் நிலையிலிருந்து சமாதான வழிக்கு மாறிச் செல்கின்றன. அரசியல் தீர்வை புலிகள் இயக்கம் ஆதரிக்குமானால் உலக சமூகமும் அதற்கு ஆதரவளிக்க உறுதியளித்திருக்கிறது.

புலிகள் இயக்க அங்கத்தவர்களைப் பராமரிப்பதற்கு உலக நாடுகளின் உதவி மிக மிக அவசியமானதாகும். இக்கூட்டத்தில் மூத்த தளபதி கருணாவும் உரையாற்றினார். அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார். (ஐ)

### கோஷ்டி மோதலில் மாணவன் மரணம்!

கொழும்பு,டிசெ.9

நுகேகொடையில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் மாணவர் கோஷ்டிகள் இரண்டிற்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒரு மாணவர் கொல்லப்பட்டார். இது தொடர்பாக பொலீஸார் மூன்று மாணவர்களைக் கைது செய்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் மாலை ஏற்பட்ட இக்கைகலப்பில் மற்றொரு மாணவர் காயமடைந்தார்.

வகுப்பில் ஓர் ஆசனம் குறித்து மாணவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டிருக்கிறது. வாக்குவாதம் முற்றி இறுதியில் அது கைகலப்பாக மாறியிருக்கிறது.

கைகலப்பிலேயே ஒரு மாணவர் கொல்லப்பட்டார். கொகுவளை பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# லஞ்ச புகார் விசாரணை ஆணைக்குழு இன்னும் 2 ஆண்டுகள் பதவியிலிருக்கும்

## அதன்பின்னரே ஆணைக்குழுவை நியமிக்கலாம்

கொழும்பு,டிசெ.9

அரசமைப்புச் சட்டத்தின் 17 ஆவது திருத்தத்தின்படி புதிய லஞ்சப் புகார் விசாரணை ஆணைக்குழு ஒன்று இன்னும் இரண்டு ஆண்டுகளின் பின்னரே அதாவது 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலேயே நியமிக்கப்படும்.

- இவ்வாறு சட்டமா அதிபர் அரசமைப்புச் சபைக்கு ஆலோசனை கூறியிருக்கிறார் என அறியப்படுகிறது.

புதிய லஞ்சப்புகார் விசாரணை ஆணைக்குழு ஒன்றுக்கு உறுப்பினர்களை நியமிப்பது குறித்து யோசனை கேட்டு அரசமைப்புச் சபையினால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றுக்கான பதிலிலேயே சட்டமா அதிபர் அதனைக் கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

தற்பொழுது இருந்து வரும் லஞ்சப்புகார் விசாரணை ஆணைக்குழு அரசமைப்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட விசேட சட்டமூலம் ஒன்றினால் அமைக்கப்பட்டதாகும். அதனால் அந்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிவுறும்வரை புதிய ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அரசமைப்புச சட்டத்தில் இடமில்லை எனவும் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியிருக்கிறார் எனவும் அறியப்படுகிறது.

இன்றைய ஆணைக்கு 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அமைக்கப்பட்டது. அதன் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகளாகும். (ஐ)

# பேரழிவு தரும் ஆயுதங்கள் குறித்த அறிக்கையை ஈராக் கையளித்தது

பக்தாத்,டிசெ.9

பேரழிவு ஆயுதங்கள் தன்னிடம் இல்லை என்பதை தெளிவுபடுத்தும் ஈராக்கின் அறிக்கை நேற்று ஐ.நா. தலைமையகத்தை வந்தடைந்தது.

விதிக்கப்பட்ட காலக்கெடுவுக்கு ஒருநாள் முன்பாக நேற்றுமுன்தினம் ஈராக் தனது அறிக்கையை பக்தாத்தில் உள்ள ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்களின் தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்தது.

சுமார் 12 ஆயிரம் பக்கங்கள் கொண்ட கோப்புகள் கணனிமென் தட்டுகள் போன்றவற்றில் பேரழிவு ஆயுதங்கள் தன்னிடம் இல்லை என்பதற்கன ஆதாரங்களை ஈராக் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையை ஐ.நாவுக்குச் சொந்தமான விமானம் முதல் கட்டமாக பக்தாத்திலிருந்து சைபிரஸ"க்கு எடுத்துச்சென்றது. அங்கிருந்து மற்றொரு விமானம் மூலம் ஐ.நா.சபை உள்ள நியூயோர்க் நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஈராக்கின் அறிக்கையின் சில பகுதிகள் அரேபிய மொழியிலும், சில பகுதிகள் ஆங்கிலத்திலும் உள்ளதாகக்கூறப்படுகிறது. ஆகவே, அரேபிய மொழியில் உள்ள பகுதி முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்படும். அதன் பின்னர் ஆயுதசோதனைக் குழுவினர் ஆராய்ந்து தணிக்கை செய்வர். பின்னர் அந்த அறிக்கையை ஐ.நா.சபையின் உறுப்பு நாடுகள் பெறமுடியும்.

எவ்வாறாயினும், மொழிபெயர்ப்பு மற்றும் தணிக்கைப் பணிகள் முடிவடையவே குறைந்தது 15 நாள்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே சமயம், ஈராக்கிடம் உள்ள அனுமதிக்கப்பட்ட ஆயுதங்கள் குறித்து அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை உலக நாடுகளுக்கு தெரிவிக்கப்போவதில்லை என்று ஐ.நா. ஆயுத சோதனைக் குழுத் தலைவர் ஹன்ஸ் பிலிக்ஸ் தெரிவித்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க, ரமழான் பண்டிகையையொட்டி கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் தமது பணியை ஈராக்கில் இடைநிறுத்தியிருந்த ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் மீண்டும் தேடுதல் நடவடிக்கைளை ஆரம்பித்துள்ளனர். இதுவரை 20 இடங்களில் இக்குழு சோதனை நடத்தியுள்ளது. ஆயுத பரிசோதனைக் குழுவில் தற்போதுள்ள 17 பேரை விட மேலதிகமாக 30 பேர் நேற்று முதல் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

ஐ.நா. தீர்மானத்தின்படி அடுத்த மாதம் 26 ஆம் திகதிக்கு முன்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் தமது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)



ஈராக்கின் அறிக்கை பெட்டியிலிட்டு 'சீல்' செய்யப்படுகிறது.

## ஈராக் நாட்டின் விஞ்ஞானிகளை கடத்த அமெ. நிர்ப்பந்தம்?

ஈராக்கிய விஞ்ஞானிகளைக் கடத்திச்சென்று அவர்களிடமிருந்து தகவல்களைப் பெறுமாறு ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்களை நிர்ப்பந்திப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் ஐ.நா.ஆயுதப் பரிசோதனையில் சிக்கும் என்று அமெரிக்கா நம்பவில்லை என்றும் -

ஆகவே, ஈராக்கிய விஞ்ஞானிகளை அமெரிக்காவில் வளமான வாழ்வை அமைத்துத் தருவதாக ஆசைகாட்டியோ அல்லது பலவந்தமாகக் கடத்திச் சென்றோ, அவர்களிடமிருந்து ஈராக்கின் தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் குறித்த தகவல்களைப் பெற அமெரிக்கா முயற்சிப்பதாகவும் -

செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, ஈராக் விஞ்ஞானிகளைக் கடத்தி தகவல்களைப் பெறுமாறு அமெரிக்கா தம்மை நிர்ப்பந்திப்பதாகக் கூறப்படும் தகவல் ஆதாரமற்றது. யாரையும் கடத்துவது எங்கள் பணி அல்ல! என்று ஐ.நா. ஆயுத பரிசோதனைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் அறிக்கையை அமெரிக்கா எப்படியும் நிராகரிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

## துருக்கி மங்கை உலக அழகி

லண்டன்,டிசெ.9

லண்டனில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற உலக அழகிப் போட்டியில் துருக்கியைச் சேர்ந்த அஜரா அகின் உலக அழகிப் பட்டத்தை வென்றார். அவருக்கு ஒரு கோடி 52 லட்சம் பரிசுத் தொகை கிடைத்தது.

இரண்டாவது இடத்தை கொலம்பியாவைச் சேர்ந்த நட்டியாளா பெரல்டாவும் மூன்றாம் இடத்தை பெருவைச் சேர்ந்த மரினா மெராவும் வென்றனர்.

இந்த ஆண்டின் உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அஜரா அகினுக்கு கிரீடத்தை கடந்த ஆண்டின் உலக அழகி அக்பனி டாரிகோ (நைஜீரியா) சூட்டினார்.

போட்டியில் பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த 92 பேர் கலந்து கொண்டனர்.

உலக அழகிப் போட்டி நிகழ்ச்சி 137 நாடுகளில் ஒளிபரப்பப்பட்டது. இதனை 200 கோடிக்கும் மேற்பட்டவர்கள் கண்டு ரசித்தனர்.

இந்த உலக அழகிப் போட்டி நைஜீரியாவில் இடம்பெறவிருந்ததும்-

இதனால் அங்கு மூண்ட கலவரத்தில் 200இற்கும் மேற்பட்டவர்கள் இறந்ததும் -

இதனால் போட்டி லண்டனுக்கு இடமாற்றப்பட்டதும் -

தெரிந்தவையே. (ஒ)




லண்டனில் சனிக்கிழமை நடைபெற்ற உலக அழகுராணிப் போட்டியில் இந்த ஆண்டுக்கான உலக அழகியாகத் தெரிவுசெய்யப்பட்ட துருக்கியைச் சேர்ந்த அஜரா அகின் (நடுவில்), 2ஆவது இடம் வென்ற கொலம்பியாவைச் சேர்ந்த நட்டியாலா பெரல்டா (இடது), 3ஆவது இடம் வென்ற பெருவைச் சேர்ந்த மரினா மெரா.

## நாகப்பா என்னிடம் இல்லை! வீரப்பன் பரபரப்புத் தகவல்



பெங்களூர்,டிசெ.9

கர்நாடக மாநில முன்னாள் அமைச்சர் நாகப்பாவின் குடும்பத்தினருக்கு நேற்றுமுன்தினம் இரவு சந்தனமரக் கடத்தல் வீரப்பன் அனுப்பியுள்ள 6ஆவது ஒளி நாடாவில் தனது பாதுகாப்பில் நாகப்பா இல்லை என்று கூறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

சமீபத்தில் நடந்த அதிரடிப்படைத் தேடுதல் நடவடிக்கையின்போது நாகப்பா காயமடைந்திருக்கலாம் என்று நம்பகமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. இது குறித்து கர்நாடக உள்துறை அமைச்சர் மல்லிகார்ஜுன கார்கேயிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு 'வீரப்பன் தற்போது அனுப்பியுள்ள ஒளிநாடா இன்னும் வந்து சேரவில்லை. அது கிடைத்த பின்னர்தான் கருத்து தெரிவிக்கமுடியும்' என்றார்.

நாகப்பா கடத்தப்பட்டு 3 மாதங்களுக்கு பின்னர் தற்போது வெளியாகியுள்ள தகவல்கள் கர்நாடகத்தில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## 12 ஆண்டுகளுக்குப் பின்னர்

# குவைத் மீது படையெடுத்ததற்காக மன்னிப்பு கோரினார் அதிபர் சதாம்

பக்தாத்,டிசெ.9

குவைத் மீது 12 ஆண்டுகளுக்கு முன்னர் படையெடுப்பு நடத்தி ஆக்கிரமித்தற்காக தற்போது ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் மன்னிப்பு கேட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையை, ஈராக் தகவல் துறை அமைச்சர் அந்நாட்டு தொலைக்காட்சியில் நேரடியாக வாசித்தார்.

அதில் சதாம் தெரிவித்துள்ளதாவது:-

நிகழ்ந்துவிட்ட தவறு (குவைத் ஆக்கிரமிப்பை குறிப்பிடுகிறார்) கடவுளை கோபப்படுத்தியிருக்கலாம். அதற்காக நாங்கள் கடவுளிடம் மன்னிப்புக் கோருகிறோம். அதே நிலையில் நாங்கள் குவைத் மக்களிடமும் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம்.

1989இல் நாங்கள் குவைத்துடன் சுமுகமாகப் பிரச்சினையை முடித்துக்கொள்ள விரும்பினோம். ஆனால், அந்நாட்டு அதிகாரிகள் ஆர்வம் காட்டாத காரணத்தால் நாங்கள் ஆயுத வழியில் இறங்கவேண்டியதாகிவிட்டது. இதன்மூலம், குவைத்தின் உயர் அதிகாரிகளின் சதித்திட்டத்திற்கு ஈராக் பலியாகிவிட்டது. அவர்கள் ஈராக்கிற்கு சொந்தமான பெற்றோலிய வளங்களை குவைத்திற்கு மட்டுமே



உரிமை கொண்டாடி வருகிறார்கள்.

குவைத் அதிகாரிகள் அமெரிக்காவுடன் இணைந்து ஈராக்கை தாக்குவதற்குத் திட்டமிட்ட ஆவணங்கள் எங்களுக்கு கிடைத்தன. இதையடுத்தே நாங்கள் எங்களை தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

நாங்கள் ஆக்கிரமிப்பு செய்ததற்காக குவைத் மக்களிடம் தற்போது மன்னிப்பு கேட்பதால் மட்டுமே நாங்கள் பலவீனமாகிவிட்டதாகக் கருத வேண்டாம். வரலாறு நேர்மையானதாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் வருத்தம் தெரிவித்துள்ளோம்.

- இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார். (ஒ)

## சதாமின் மன்னிப்பை குவைத் நிராகரிப்பு!

1990இல் குவைத் மீது ஆக்கிரமிப்பு செய்ததற்காக நேற்று சதாம் ஹுசைன் அறிக்கை மூலம் மன்னிப்பு கேட்டிருந்தார். ஆனால், அதை ஏற்க குவைத் அரசு மறுத்துவிட்டது.

சதாமின் மன்னிப்பு அறிவிப்பு அர்த்தமில்லாதது. அதை ஏற்க இயலாது என்று குவைத் நாடாளுமன்ற சபாநாயகர் கூறியுள்ளார்.

குவைத் மக்களை அங்குள்ள அமெரிக்கப் படைகளுக்கு எதிராக திருப்பும் நோக்கில் சதாம் இவ்வாறு செயற்படுகிறார் என்று குவைத் தகவல்துறை அமைச்சர் ஷேக் அஹமது அல்பகத் அல்சபா குற்றம் சாட்டியுள்ளார். (ஒ)

## பங்களாதேஷில் திரையரங்குகளில் குண்டுகள் வெடித்தன!

டாக்கா,டிசெ.9

பங்களாதேஷில் நேற்றுமுன்தினம் திரையரங்குகளில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் 17 பேர் உயிரிழந்தனர்; 200 பேர்வரை காயமடைந்தனர்.

தலைநகர் டாக்காவிலிருந்து 110 கிலோ மீற்றர்கள் வடக்கே உள்ள மைமென்சிங் நகரில் இத்தொடர் குண்டுவெடிப்புகள் இடம்பெற்றன.

இந்த நகரில் உள்ள 4 திரையரங்குகளில் குண்டுகள் வெடித்தன. அவற்றில் ஒரு திரையரங்கில் காட்சி முடிந்து மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தபோது இருக்கைகளின் இடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி குண்டு வெடித்தது.

மற்றைய 3 திரையரங்குகளிலும் படக்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே குண்டுகள் வெடித்துள்ளன.

இக்குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து எதிர்க்கட்சியான அவாமி லீக்குக்கு பண உதவி வழங்கும் சபீர் ஹுசைன் சவுத்ரி, எழுத்தாளர் முண்டஷீர் மாமுன் உட்பட பலரை பங்களாதேஷ் பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஒ)



மேற்குக்கரையில் நேற்று இடம்பெற்ற இஸ்ரேலுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றில் இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடனின் படங்களை ஏந்தியபடி பலஸ்தீனப் பெண்கள் சென்றனர். இதேவேளை இஸ்ரேலில் பின்லேடனின் அல்கெய்டா அமைப்பு தாக்குதல்களை நடத்தக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

## தமிழக தலைவர் திருமாவளவன் தந்தையின் பெயரை மாற்றினார்!

ஐந்தாயிரம் பேருக்குத் தமிழ் பெயர் சூட்டும் விழா சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

மதமாற்றத்தடைச் சட்டத்தினை எதிர்த்தே இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் சுமார் ஐயாயிரம்பேர் இந்து மதப் பெயர்களை மாற்றி தமிழ் பெயர்களைச் சூட்டிக்கொண்டார்கள்.

இந்த நிகழ்வில் தனது தந்தையின் பெயரையும் மாற்றி அவருக்குத் தொல்காப்பியன் எனப் பெயர் சூட்டினார் திருமாவளவன்.

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பில் உள்ள அனைவருமே தமிழ்ப் பெயர்களையே சூட்டிக்கொள்ள வேண்டும் எனவும் இந்த விழாவில் உரையாற்றிய திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார். (ஒ)

# கைவிடப்பட்ட வீட்டிலிருந்த பெருமளவு கசிப்பு அழிப்பு

கொழும்புத்துறைப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள வீடொன்றிலிருந்து கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களால் 500 லீற்றர் கசிப்பு கைபபற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

இவ்வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து நேற்றுமுன்தினம் இரவு அப்பகுதியை முற்றுகையிட்ட இளைஞர் குழு நிலத்துக்கு அடியில் இரண்டு பெரிய 'பரல்களில்' புதைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பை மீட்டு அழித்தது. அத்துடன் கசிப்பு தயாரிக்கப் பயன்படும் உபகரணங்களும் அழிக்கப்பட்டன.

அதேநேரம் இக்கசிப்பு உற்பத்திக்கு உடந்தையாக இருந்த அயல்வாசிகள் சிலரையும் இளைஞர் குழு எச்சரித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. (ஒ-30)

# அரச ஊழியர்களுக்கு நஷ்டஈட்டு காசோலை

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் வீடு மற்றும் உடைமைகளை இழந்த 17 அரச ஊழியர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கும் வைபவம் யாழ். செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சுச் செயலாளர் எஸ். ஜெயரத்தினம் இக்காசோலைகளை வழங்கினார். 42 அரச ஊழியர்களுக்கான காசோலைகள் யாழ்.செயலகத்துக்குக் கிடைத்துள்ளபோதும் 17 ஊழியர்கள் மட்டுமே நேற்றுமுன்தினம் காசோலைகளைப் பெற்றுக்கொண்டனர். எஞ்சியவர்கள் தமது காசோலைகளை தம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்.அரச அதிபர் செ. பத்மநாதன் கேட்டுள்ளார். (ம-3)

## 'பெண்கள் அறை புதுமுகவிழா'

"சுத்தத்தின் செல்வன்" என்று மக்களால் மகுடம் சூட்டப்பெற்று
அன்றும்! இன்றும்! என்றென்றும்!
மக்கள் மனதில் மங்காப் புகழ்பூத்த
"சைவ உணவகம்"

## மலாயன் கபே

இன்று (09.12.2002) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அனைத்து வாடிக்கை நெஞ்சங்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் பழைய நிர்வாகத்திறமையுடன் எமது "பெண்கள் அறை" பகுதியைத் திறக்க உள்ளதால் அனைத்து வாடிக்கையாளர்களும் வந்து நிகழ்வைச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*36, 38, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.* (11519) - நிர்வாகம்.
*T.P.: 021-2222373.*

## பதிவு செய்யவும்

**புற்றுநோய் வைத்திய நிபுணர் கொழும்பில் இருந்து வருகை தந்து 17ஆம், 18ஆம் திகதிகளில் எமது கிளினிக்கில் நோயாளிகளைப் பார்வையிடவுள்ளார். சிகிச்சைபெற விரும்புவோர் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
**08, இராமையாச் செட்டியார் வீதி,**
**(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**
(11555)

**எமது ஈழமண்ணில் முதல்முதலாக**
**லாலாவின் வர்த்தக விளம்பரப் பத்திரிகை**
**இலவசமாக**
**மாதம் இருமுறை வெளிவர இருக்கிறது.**
*முதல்பிரதி வெளியீடு தை 01-01-2003*
*லாலா சோப் தொழிற்சாலை,*
*அச்சுவேலி.*
(C-25274)

## மிகவும் சிக்கனமானதும், ஆகுசெலவு குறைந்ததுமான அனல் ஃபக்ஸ் இயந்திரங்கள்

brother office network இலிருந்து



தரத்தை விட்டுக் கொடுக்காமல், உங்கள் அலுவலகத்தின் தொழிற்பாட்டு ஆகுசெலவைச் சாத்தியமானளவு மிகவும் குறைவாக வைத்திருக்க விரும்பினால், அதைச் செய்வதற்கு உலகின் பிரசித்தமான brother வகையிலான அனல் ஃபக்ஸ்கள் உங்களுக்கு உதவியளிக்கும். அது பற்றிப் பரிசீலித்துப் பாருங்கள்.

**ஒவ்வொரு ஃபக்ஸ் இயந்திரமும்**
- 20 பக்க ஞாபகசக்தி
- பதிலளிக்கும் இயந்திரம்
- 50 மீ. கடதாசிச் சுருள்

ஆகியவற்றை இணைத்துள்ளது.

office network
**ஓஃபிஸ் நெற்வேர்க் (பிறைவேற்) லிமிற்றெற்**
இல. 12, மகளின் வீதி, கொழும்பு - 8 தொ.பேசி: 390490-2
அவசர தொலைபேசி இல.: 074 713349
ஃபக்ஸ்: 074 713349 ஈ மெயில்: onl@sltnail.lk

வணிகர்கள்
கண்டி: 08 233593, 074 471402 • அநுராதபுரம்: 025-22073 • மாத்தறை: 041-21001-3 களுத்துறை (வடக்கு): 074-280719 • பொலன்னறுவை: 027-25626 • இரத்தினபுரி: 045-23779-80-81 பதுளை: 055-29505 • கம்பஹா: 033-27483 • குருநாகல்: 074-690501 • திருகோணமலை: 026-27256 யாழ்ப்பாணம்: 021-2222543

**யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கம்(வ.து)**

**நாற்பத்திரெண்டாவது வருடாந்தப் பொதுக் கூட்டம்**

இடம்: மணிக்கூண்டு வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி
காலம்: 11.12.2002 அன்று புதன்கிழமை
நேரம்: காலை 9.30 மணி
தலைவர்: திரு.சி.பாக்கியலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

செ.புவனேந்திரன்
*செயலாளர்.*
(C/25277)

**இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம்**
**யாழ்ப்பாண அலகு**
**அபிவிருத்திக் குழுவினருடனான கலந்துரையாடல்**

*இடம்:* நிர்வாக சேவை அலுவலகம், கிளிநொச்சி. (கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திற்கு அருகில்)
*காலம்:* நாளை (10.12.2002) செவ்வாய் மு.ப.10.00 மணி.
*விடயம்:* ***நிர்மாண ஒப்பந்த வேலைகள்.***

இந்நிகழ்வில் அனைத்து ஒப்பந்தகாரர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*குறிப்பு:* கிளிநொச்சி செல்வதற்கு வாகன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் யாழ்.வீரசிங்கம் மண்டப முன்றிலுக்கு 7.45 மணிக்கும் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு 8.30 மணிக்கும் வருகை தரவும்.

(11533) - செயலாளர்.

## 10ஆவது வருட அஞ்சலி

மலர்வு 14 - 04 - 1917



உதிர்வு 30 - 11 - 1992

## அமரர் இராசசுந்தரம் செல்வரத்தினம்

*(இளைப்பாறிய காசாளர், மக்கள் வங்கி, சங்கானை)*
***திதி: பூர்வபக்க ஷஷ்டி (09.12.2002)***

**ஆண்டுகள் பத்து சென்றாலும் - பப்பா**
**ஆறாத் துயர் இன்னும் நீங்கவில்லை!**
**நீண்ட நெடும் பயணம் நீங்கள் சென்றதனால்**
**உருகுகின்றோம் உள்ளத்தால் மிகவும் வருந்தியே!**

தகவல்:
**Dr.S.சிவனேசன்,**
*காரைநகர்.* (11527)

என்றும் உங்கள் நினைவுடன்:
பாபு குடும்பத்தினர் (மகன்).

சிவமயம்



## காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில்

*ஈழத்துச் சிதம்பரம்*

## திருவாதிரை உற்சவம் - 2002

சிவநேயர்களே!

உஷக் காலமாகிய மார்கழி மாதத்து பூரணையை அடுத்துவரும் திருவாதிரை நட்சத்திரத்தை நிறைவாகக் கொண்டு முன்பத்து நாள்களுக்கு நடத்தப்படுவதே திருவாதிரை உற்சவம். சிவபெருமானது அருள்மூர்த்தமாகிய ஆனந்தத் தாண்டவமாடும் நடராசா மூர்த்திக்கே சிறப்பான இவ்விழா இந்தியாவிலே தில்லைச்சிற்றம்பலத்திற்குச் சமமாகத் தொன்றுதொட்டே ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்று வருவது மரபு. இம்முறையும் திருவாதிரை உற்சவம் பெரும் சிறப்பாக நடைபெற கூத்தப்பிரான் திருவருள் பாலித்துள்ளார்.

**திருவாதிரை உற்சவ விபரம்**

- நிகழும் சித்திரபானு வருஷம் கார்த்திகை மாதம் 26ஆம் திகதி (12.12.2002) வியாழக்கிழமை திருவெம்பாவை ஆரம்பம். தினமும் அதிகாலை 5.00 மணிக்கு பூசையும் திருப்பள்ளியெழுச்சி ஓதலும். காலை 7.00 மணிக்கு சிவபெருமானுக்கு விசேட அபிஷேகம். காலை 8.00 மணிக்கு காலைப் பூசை. காலை 9.30 மணிக்கு திருவெம்பாவை ஓதல். காலை 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை தொடர்ந்து திருவீதி உலா நடைபெறும்.
- சித்திரபானு வருஷம் மார்கழி மாதம் 5ஆம் திகதி (20.12.2002) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை. கூத்தப்பிரான் அம்பிகையுடனும் பரிவார மூர்த்திகளுடனும் தேருக்கு எழுந்தருளி பஞ்சரத பவனி நடைபெறும். பின்னிரவு 2.00 மணிக்கு மூலமூர்த்திக்கு அபிஷேகமும். அதனைத் தொடர்ந்து 3.00 மணிக்கு வசந்த மண்டபத்தில் ஆருத்திரா அபிஷேகமும். அதிகாலை 6.00 மணிக்கு நடேசர் ஆருத்திரா தரிசனமும் நடைபெறும்.
- சித்திரபானு வருஷம் மார்கழி மாதம் 6ஆம் திகதி (21.12.2002) சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு திருவூடல். மாலை 4.30 மணிக்கு தீர்த்தோற்சவம்.

*குறிப்பு: பத்து நாள்களும் தொடர்ந்து பெரிய சேவையும் மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) மாலையில் மணிவாசகர் விழாவும் சிறப்பாக நடைபெறும்.*

ஆ.அம்பலவி முருகன், மு.சுந்தரலிங்கம்,
ஆதீனகர்த்தர்கள்.
(சி-25296)

உதயன்

# ஹக்கீமின் குத்துக்கரணம்

விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை புலிகள் சரிவர - முழுமையாக - நடைமுறைப்படுத்தாததே கட்சிக்குள் பிளவு ஏற்படக்காரணம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

தனது தலைமைப் பதவி பறிபோன நிலையில் ஒஸ்லோவிலிருந்து அவசர அவசரமாக நாடு திரும்பிய அவர் கட்சிக்குள் மீண்டும் தனது செல்வாக்கைத் தூக்கி நிறுத்த இப்படி ஒரு குற்றச்சாட்டை எடுத்துவிட்டிருக்கிறார்.

அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்பிருந்தே முஸ்லிம் காங்கிரஸ் வெளித்தோற்றத்தில் ஐக்கியப்பட்ட அமைப்பாகக காட்சியளித்து வருகின்றபோதும் உள்ளே அது ஏராளமான இழுபறிகள், புகைச்சல்கள், காலைவாரும் சதிகள் என்று குழம்பிய குட்டையாகவே இருந்து வருகிறது.

தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் முஸ்லிம்களின் உரிமைகளை மதித்துப் பேணும் ஓர் ஏற்பாடாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முஸ்லிம்களின தலைமை என்ற ஸ்தானத்தை வகித்த ஸ்ரீலங்கா முஸலிம காங்கிரஸின் தலைமையோடு - தலைவரோடு- உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ள முன்வந்தார்.

'வரலாற்றுச் சிறப்புமிக்க ஹக்கீம் - பிரபா உடன்படிக்கை இந்த நாட்டின் முஸ்லிம்களது இன அடையாளத்தையும், அவர்களது தனித்துவத்தையும் அங்கீகரிக்கும் பண்புகளைக் கொண்டிருந்தது.

அரசியல் தீர்வை நோக்கிய திசையில் நாடு முன்னேறிக் கொண்டிருந்த சமயத்தில் தாங்கள் புறக்கணிக்கப்படவில்லை என்ற நிறைவை முஸ்லிம்களுக்கு வழங்கியது இந்த உடன்படிக்கை.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பிறகு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினுள் ஒரு சாரார் - ஏற்கனவே ஹக்கீமுக்கு எதிரான ஒரு குழுவாக இயங்கிய அணியினர் - உடன்படிக்கையைக் காரணம் காட்டி அரசியல் ஆதாயம் தேடத் தொடங்கினர். சமாதானத்தை எதிர்க்கும் விரோத சக்திகளின் கையில் வீழ்ந்த அந்த அணியினா கிழக்கு மாகாணத்தில் கொந்தளிப்பு நிலையை உருவாக்கும் சதிகளுக்கு துணைபோயினர்.

ஹக்கீம் புலிகளிடம் சரணாகதி அடைந்துவிட்டார் என்று முஸ்லிம்கள் மத்தியில் பிரசாரம் செய்து அவரை கட்சிக்குள்ளும், முஸ்லிம் மக்கள் மத்தியிலும் தனிமைப்படுத்த அவர்கள் முயன்றனர். முஸ்லிம்களுடனான உடன்படிக்கையில் கூறப்பட்டிருப்பவற்றை கிழக்கில் புலிகள் நிறைவேற்றவில்லை என்று அதாவுல்லா தலைமையிலான அணி அப்போது குமுறியது - குற்றஞ்சாட்டியது. ஆனால், புலிகள் முஸ்லிம்களின் தலைமையை அங்கீகரித்தனர். பேச்சுகளில் அவர்களின் பிரதிநிதித்துவத்துக்கு உரிய இடமளித்தனர். சமாதானப் பேச்சுக்கள் நாட்டுக்கு வெளியே நல்லபடி நடந்து கொண்டிருக்க முஸ்லிம் காங்கிரஸினுள் பிளவு தீவிரமடைந்தது. ஹக்கீமின் தலைமைப் பதவி ஆட்டம் கண்டது. அவரை அப்பதவியிலிருந்து தூக்கி எறிய சதி நடந்தது. அவர் தலைமைப் பதவியை இழக்கும் நிலைமையும் உருவாகியது.

பதவிக்கு ஆபத்து என்றதும் ஒஸ்லோவிலிருந்து பறந்து வந்த ஹக்கீம் தனது செல்வாக்கை மக்கள் மத்தியில், குறிப்பாகக் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் தூக்கி நிறுத்தவேண்டியவராக இருக்கிறார். எனவே, இப்போது அதாவுல்லா அணியினருக்குப் போட்டியாக அரசியல் கருத்தரங்குகளைக் கூட்டி ஆதரவு தேடும் பிரசாரங்களை முடுக்கிவிட்டிருக்கிறார்.

ஹக்கிம் - பிரபா உடன்படிக்கையை புலிகள் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை தனது பிரசாரத்தின் மூலோபாயமாக மாற்ற எத்தனிக்கிறார் ஹக்கீம்.

மூதூரில் ஒரு கூட்டத்தில் அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை.

சமாதான முயற்சிகள் தீர்வுக்கான அடிப்படைகளை முடிவு செய்யும் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கும மிக முக்கியமான கட்டத்தில் புலிகள்மீது குற்றஞ்சாட்டும் விதத்தில் ஹக்கீம் பேச முனைவது ஆபத்தானது. முஸ்லிம் மக்களிடையே உணர்வுகளைத் தூண்டி இன சௌஜன்னியத்தை குழப்பிவிடக்கூடியது.

ஒஸ்லோ பேச்சுகளின் முடிவில் நடந்த செய்தியாளர்கள் மாநாட்டில் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் கூறிய கருத்துக்களை முஸ்லிம் மக்களும அவர்களது தலைமைகளும் கவனத்தில்கொள்வது நல்லது.

சமஷ்டி அமைப்பு பற்றி முழு அளவில் பரிசீலிக்கப்படுமபோது அதில் முஸ்லிம்களின் நியாயமான அபிலாஷைகளையும் சேர்த்து உறுதிசெய்யும் வகையில் செயலூக்கம் மிக்க முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை (Effective Muslim Representation) பேச்சுகளில் சேர்த்துக்கொள்வோம் - என்றார் பாலசிங்கம்.

அரசியல் ரீதியில் முஸ்லிம் மக்களுக்கு கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை உறுதி செய்துகொள்ள- தேவையற்ற அரசியல் குத்துக்கரணங்களை விடுத்து- தமக்குள் ஐக்கியப்படுவதே தீர்க்க தரிசனம் மிக்க முடிவு என்பதை முஸ்லிம் தலைமைகள் உணரட்டும்.

# குடாநாட்டின் அழிவுகள் கண்டு பெரும் வேதனையடைகின்றோம்!

## திருமறைக் கலாமன்ற தெற்குக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்ப்பாணக் குடாநாடு யுத்தத்தினால் இவ்வளவு அழிவுகளையும், இழப்புக்களையும் சந்தித்திருப்பது கண்டு மிகவும் கவலையடைகின்றோம்.

இது குறித்து இதுவரை காலமும் எமக்கு எதுவும் தெரியாது. எவரும் தெரியப்படுத்தவும் இல்லை. இவ்வாறு குறிப்பிட்டார் திருமறைக் கலாமன்றத்தின் தென்னிலங்கை இணைப்பாளர் பிரியங்கா தீபால் எதிரிசிங்க.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் "சமாதான உறவுப் பாலம்" என்ற பெயரில் குடாநாட்டுக்கு பயணம் மேற்கொண்டுள்ள கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் கலைஞர்கள் நேற்று 'உதயன்' பணிமனைக்கு வருகைதந்தனர்.

அந்தக் கலைஞர்கள் குழுவிற்கு தலைமை தாங்கிய பிரியங்க தீபால் எதிரிசிங்க மற்றும் பிபிலே சிறிதம்ப தேரர், ஹரேஷ மதுரங்க குமார, பிரான்ஸிஸ் ஆகியோர் யாழ்.குடாநாட்டு நிலைவரம் தொடர்பான தமது கருத்துக்களை உதயனுக்கு வழங்கினர்.

அப்போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

"நாங்கள் யாழ்ப்பாணம் வந்திருப்பது இதுவே முதற்றடவை ஏ-9 நெடுஞ்சாலையூடாக இங்கு வரும்போது வழியில் நினைத்துப் பார்க்க முடியாத அழிவுகளைக் கண்டு எமது இதயங்கள் இனம்புரியாத சோகத்தில் ஆழ்ந்தன. இந்த அழிவுகளை இதுவரை காலமும் எவரும் எமக்குத் தெரியப்படுத்தவில்லை.

"தமிழ் மக்கள் மிகவும் ஆபத்தானவர்கள், புலிகள் பயங்கரவாதிகள், அவர்களை நெருங்குவது மிகவும் ஆபத்தான விடயம் என்று தான் தென்னிலங்கையில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

"ஆனால், நாங்கள் இங்குவந்து நேரடியாகப் பார்த்த பொழுது நாங்கள் கேள்விப்பட்டதற்கு முற்றிலும் மாறான வகையிலேயே இங்கு நிலைமையுள்ளது.

"கொழும்பில் புலிகள் ஏதாவது தாக்குதல் நடத்தினால் மட்டும் அதனைப் பெரிதாக காட்டிக்கொண்டு இங்கு நடந்த உயிர், உடைமை அழிவுகளை சில சக்திகள் மூடிமறைத்து விட்டன.

"உயிர், உடைமைகள் என்பது அனைவருக்கும் பொதுவானது. அதில் சிங்கள உயிர், தமிழ் உயிர் என்ற பாகுபாடு காட்டுவது மிகவும் கொடுமையானது. இந்த நிலைமைகளை நாங்கள் எமது கலைப்படைப்புக்கள் ஊடாக இயன்றவரை தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக்கூறுவோம்.

"அதேவேளை, தமிழ் மக்களின் பிரச்சினைகளை சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூறும் வகையில் 'உதயன்' போன்ற பத்திரிகைகள் சிங்கள மொழியிலான பதிப்பு ஒன்றையும் வெளியிட வேண்டும்" - என்று அவர்கள் தெரிவித்தனர். (ஓ-4)

## தேவைகளை இனங்காண்பதற்கு

# கிராமிய மக்கள் அமைப்புகள் விழிப்பாகச் செயற்படவேண்டும்!

## உதவிப் பிரதேச செயலர் உரை

மக்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றுவதற்கு மக்கள் அவர்களின் தேவைகளைத் தெரிவிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆதலால், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் விழிப்பாக செயற்பட்டு மக்களின் தேவைகளை இனங்காணுவது அவசியம் ஆகும் - இவ்வாறு தெரிவித்தார் வலி.மேற்குப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலரும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளருமான கே.தர்மராசா.

கலைநகர் நேருஜி சனசமூக நிலைய முன்றிலில் நடைபெற்ற சுழற்சிமுறைக் கடன் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கே.தர்மராசா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இன்று அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள சமாதான முயற்சியினால் வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையான நிதி கிடைத்துள்ளது. இந்நிதிமூலம் எமது பிரதேசத்தினை அபிவிருத்தி செய்வதற்கு நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தயாராக இருக்கவேண்டும். வன்னியில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்த மக்களை உடனடியாக மீளக்குடியமர்த்துவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் நாம் எடுக்கவேண்டியுள்ளது.

இந்நிலையில், மக்களின் உடனடித் தேவைகள் குறித்து இனங்காண வேண்டும். அதிகாரிகள் மக்களுக்குத் தேவையானவற்றை இனங்காண்பது கடினமானது. இதனால்தான் கிராமப் பிரதேச, மாவட்ட மட்டங்களில் நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்கக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிராம மட்டக் குழுககள் கிராம உத்தியோகத்தர்களைத் தலைவராகக்கொண்டு செயற்படுகின்றன. இந்தக் குழுக்களில் சனசமூக கிராம முன்னேற்றச் சங்கங்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக செயற்படுகின்றனர். ஆதலால், அந்தந்தப் பகுதி மக்களின் தேவைகள் இனங்காணப்பட்டு உறுப்பினர்களினால் கிராம மட்டக் குழுவில் சமர்ப்பிக்கமுடியும்.

கிராமமட்ட நல்லிணக்கக் குழு பிரதேச மட்ட நல்லிணக்க குழுவிற்கு மக்களின் தேவைகளை சமர்ப்பிக்கமுடியும். பிரதேச மட்ட நல்லிணக்கக்குழு மாவட்ட மட்ட நல்லிணக்கக்குழுவிற்கு பிரதேசத்தின் தேவைகளை சமர்ப்பிக்கும். இதன்மூலம் மக்களிடமிருந்தே இனங்காணப்பட்டு மக்களினால் முன்வைக்கப்படும் திட்டங்கள் செயற்படுத்தப்படும். ஆதலால், மக்களின் பிரதிநிதிகளான கிராமக்குழு மற்றும் சனசமூக நிலைய உறுப்பினர்கள் இன்றைய காலகட்டத்தில் விழிப்பாக இருக்கவேண்டியது இன்றியமையாததொன்றாகும் - என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி, கிராம உத்தியோகத்தர் வி.ரி. கதிர்காமநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ஒ-175)



யாழ்.பொலீஸார் மேற்கொண்ட திடீர் பரிசோதனைகளின் போது கைப்பற்றப்பட்ட கசிப்பு மற்றும் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், பரல்கள் என்பன பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது. பொலீஸ் அதிகாரிகளும் படத்தில் காணப்படுகின்றனர். *படம்: பத்மராஜ்*

# குடாக்கடலில் இந்திய 'றோலர்' குருநகர் மீனவர்கள் கவலை

குருநகர்,டிசெ.9

இந்திய மீனவர்கள் றோலர்களில் குடாக்கடலில் கல்முனைக் கரைவரை வந்து தொழில் செய்வதனால், றோலரைப் பயன்படுத்தித் தொழில் செய்துவரும் யாழ்.குடாநாட்டு மீனவர்கள் ஆழமான இலங்கைக் கடற்பகுதியில் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக றோலர் மூலம் தொழில் செய்துவரும் மீனவர்கள் தெரிவித்தனர்.

குருநகர் இறங்குதுறையில் சுமார் 37றோலர்கள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி மீனவர்கள் நாளாந்தம் இரவு, பகல் குடாக்கடலூடாக ஆழங்கூடிய கடற்பகுதிக்குச் சென்று தொழில் செய்துவருகின்றனர்.

ஆனால், இந்தியாவிலிருந்து வரும் றோலர்கள் நாளாந்தம் பிற்பகல் 2மணியளவில் பாலைதீவை அண்டிய கடற்பகுதிக்கு தொழில் செய்ய வருவதனால், குருநகர் மீனவர்களின் றோலர்கள் அவ் றோலர்களைத் தாண்டிச் சென்று தொழில் செய்ய முடியாமலுள்ளதாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பாலைதீவுக் கடலுக்கு வரும் இந்திய றோலர்கள் அங்கிருந்து குடாக்கடலின் கல்முனைக் கரைவரை வந்து தொழில் செய்கின்றன என்றும் -

இவை யாழ்ப்பாணத்தில் பாவிக்கப்படும் றோலர்களை விட பலம் வாய்ந்ததுடன் அவைகளில் பூட்டப்பட்டுள்ள இயந்திரங்களும் பலமடங்கு சக்தி மிக்கவை எனவும் - குருநகர் மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-51)

**நாளை**

கார்த்திகை 24
செவ்வாய்க்கிழமை
(10.12.2002)
திதி : ஷஷ்டி
முற்பகல் 10.31 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
நண்பகல் 12.01 வரை.
சுபநேரம் : 10.48 - 11.19
ராகுகாலம்: 3.19 - 4.49
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

இறக்கும் பொழுதைவிட பிறக்கும் பொழுது எல்லோரும் செல்வந்தர்களாகவே இருக்கின்றனர்.

## வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின்

# 'சாகித்தியவிருது' பெறும் நூல்களின் விவரம்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வருடந்தோறும் வழங்கப்படும் 'சாகித்தியவிருது' பெறும் நூல்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் வெளியான நூல்கள் இந்த விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் -

விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் எதிர்வரும் 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் திருகோணமலையில் இடம்பெறும் தமிழிலக்கிய விழாவில் வைத்து வழங்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. விருதுபெறும் நூல்கள் மற்றும் ஆசிரியர்கள் பற்றிய விவரம் வருமாறு:-

★ கவிதை: 'ஆபிரிக்க கவிதை' - சோ.பத்மநாதன், 'சொல்லில் எழுதிய வாழ்வு' - அ.நிசாந்தன்.

★ பிறதுறை நூல்கள்: 'தூவானம்' - அ.யேசுராசா, 'பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்' - அருள்குரு ரூபன் மரியாம் பிள்ளை அடிகளார், 'அமுதமொழி' - பண்டிதர் சி.அப்புத்துரை. 'மனமருத் துவ அருமை' - தி.கணேஸ்வரன்.

★ நாடகம்: 'நிதர்சனத்தின் புத்திரர்கள்' - கந்தையா ஸ்ரீ கணேசன், 'நாளை நல்ல நாள்' - பா.சிவபாலன்.

★ சிறுகதை: 'ஊரும் உலகமும்' - கே.வி.நடராஜன்.

★ நாவல்: 'சிட்டுக்குருவிகளும் வானம்பாடிகளும்' - திருமதி அங்கயன் கயிலாயநாதன்.

★ சிறுவர் இலக்கியம்: 'மரத்தடி நிழலில்' - என்.என். உதயசந்திரன்.

★ திறனாய்வியலும் விமர்சனமும்: 'படைப்பாளிகளும் ஆய்வாளர்களும்' - முகமது சலீம், 'கத்தோலிக்க இலக்கியப் பாரம்பரியங்கள்' - அருள்திரு ஞானேந்திரன் அடிகளார்.

★ உயர்கல்வி: I 'சர்வதேச நாணய முகாமைத்துவம்'- மாணிக்கம் நடராஜசுந்தரம்.

II சமுத்திரவியல் - ஏ.எஸ்.ஆனந்தன்.

III மஞ்சகாவியம் மயங்கு தமிழியல் - பண்டிதர் க.சச்சிதானந்தன். (எ-30)

# இந்து சமய விவகார அ
# செயற்றிட்ட முன்னேற்

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் 2003ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது று
மேற்கொள்ளப்பட்ட பணிகள் பற்றிய விவரங்கள் இங்கு தரப்படுகின்றன. அத்துடன் விழிப்புலனற்றோர் வாழ்வுக்காக அமைச்சரின் சம்பளத்தின்

### புனரமைப்பு பணிகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்ட ஆலயங்கள்

| ஆலயத்தின் பெயர் | வழங்கப்பட்ட திகதி | வழங்கப்பட்ட தொகை (ரூபாவில்) |
|---|---|---|
| 01. கொற்றாவத்தை செட்டித்துறை சித்தி விநாயகர் ஆலயம், கரணவாய் வடக்கு, கரவெட்டி | 07.11.2002 | 500,000 |
| 02. ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில், பெருங்குளம், வேலணை | 15.11.2002 | 300,000 |
| 03. ராகுஸ் எஸ்டேட் கோவில், களுத்துறை | 20.11.2002 | 25,000 |
| 04. பல்லேகொட எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 25,000 |
| 05. கொலேடன் எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 25,000 |
| 06. டெல்பிறின் எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 20,000 |
| 07. உயிக்வெலின் எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 20,000 |
| 08. மிருசுவற்ற எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 20,000 |
| 09. நியூசற்றேல் எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 15,000 |
| 10. லேன்பெற்றேற்ரியார் எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 15,000 |
| 11. அம்பதென்ன எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 20,000 |
| 12. எல்துவ எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 20,000 |
| 13. யட்டுதெல்ல எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 20,000 |
| 14. றஜகல்ல எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 20,000 |
| 15. வெற்றிகல எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 20,000 |
| 16. செல்றிட எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 20,000 |
| 17. மிரிஸ்தன எஸ்டேட் கோயில், களுத்துறை | 20.11.2002 | 15,000 |
| 18. கனகாம்பிகா சமேத கனகலிங்கேஸ்வரர் ஆலயம் தெக்கணப்பாய் வட்டுக்கோட்டை | 05.12.2002 | 100,000 |
| 19. சிவன் கோயில், காரைநகர் | 05.12.2002 | 100,000 |
| 20. யாழ்.சத்திரத்து ஞானவைரவர் தேவஸ்தானம் | 05.12.2002 | 200,000 |
| 21. அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், திருநெல்வேலி | 05.12.2002 | 100,000 |
| 22. மூத்த விநாயகர் தேவஸ்தானம், நல்லூர் | 05.12.2002 | 150,000 |
| 23. வம்மியடி பிள்ளையார் ஆலயம், ஆலடி வேம்பு,அம்பாறை | டிசெம்பர், 2002 | 100,000 |
| 24. வண்ணை கோட்டையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், யாழ்ப்பாணம் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 25. யாழ்.நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயம் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 26. உரும்பிராய் பர்வத பத்தினி அம்மன் கோயில் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 27. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், கந்தர்மடம் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 28. உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 29. அருள்மிகு செல்வநாகபூசணி அம்பாள் திருக்கோயில், கந்தர்மடம் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 30. ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் | டிசெம்பர், 2002 | 150,000 |
| 31. பானன்குளம் நாச்சியம்மன் ஆலயம், நல்லூர் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 32. மிருசுவில் துர்க்காபுரம் ஸ்ரீ ஞானதுர்க்கா அம்மன் ஆலயம் | டிசெம்பர், 2002 | 100000 |
| 33. சித்திவிநாயகர் தேவஸ்தானம், தச்சடம்பன், மாங்குளம் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 34. சின்னவளவு ஞான வைரவர் கோயில், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை | டிசெம்பர், 2002 | 50,000 |
| 35. கலிகை கந்தசாமி கோயில், துன்னாலை தெற்கு, கரவெட்டி | டிசெம்பர், 2002 | 100,000 |
| 36. சாமனந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில், அல்வாய் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 37. வதிரி பூவக்கரை பிள்ளையார் ஆலயம், அல்வாய் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 38. மாந்தலம் கற்பக விநாயகர் ஆலயம், பன்னாலை, தெல்லிப்பழை | டிசெம்பர், 2002 | 50,000 |
| 39. இரண்டாங்காளி முருகன் கோயில், நயினாதீவு | டிசெம்பர், 2002 | 25,000 |
| 40. ஸ்ரீ சொர்ன சித்தி விநாயகர் தேவஸ்தானம், கொக்குவில் | டிசெம்பர், 2002 | 25,000 |
| 41. படையட்டான் தோட்டம் கந்தசுவாமி கோயில், சாவகச்சேரி | டிசெம்பர், 2002 | 25,000 |
| 42. கபதீஸ்வரம் சிவன்கோயில், ஊர்காவற்றுறை | டிசெம்பர், 2002 | 25,000 |
| 43. சப்டியப்பனை அம்மன் கோயில், வட்டுக்கோட்டை | டிசெம்பர், 2002 | 25,000 |
| 44. கிரம்புவில் கந்தசாமி கோயில், சாவகச்சேரி | டிசெம்பர், 2002 | 25,000 |
| 45. யர்ழ்ப்பாணம் வண்ணைநகர் அருள்மிகு செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் | டிசெம்பர், 2002 | 50,000 |
| 46. பெரியதம்பிரான் நீலசோதி கோயில், சாவகச்சேரி | டிசெம்பர், 2002 | 25,000 |
| 47. சிறுப்பிட்டி சிவகாமி அம்பாள் கோயில், நீர்வேலி | | 50,000 |
| 48. பூரண புட்கலை சமேதர அரிகர புத்தி ஐயனார் ஆலயம், வேலணை | டிசெம்பர், 2002 | 25,000 |
| 49. புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், இடைக்காடு | டிசெம்பர், 2002 | 50,000 |
| 50. வீரபத்திரர் விநாயக ஆலயம் மாவிலித்துறை, நெடுந்தீவு | டிசெம்பர், 2002 | 50,000 |
| 51. அருள்மிகு பறாளை ஈஸ்வரர் விநாயகர் ஆலயம் சுழிபுரம் | டிசெம்பர், 2002 | 50,000 |
| 52. சித்திவிநாயகர் தேவஸ்தானம், நாவற்குழி | டிசெம்பர், 2002 | 50,000 |
| 53. இமையாணன் ஸ்ரீமுருகன் ஆலயம், உடுப்பிட்டி | டிசெம்பர், 2002 | 50,000 |
| 54. செல்வபுரம் வீரபத்திரர் ஆலயம், கரவெட்டி | டிசெம்பர், 2002 | 50,000 |
| 55. சத்தியம்மன் தேவஸ்தானம் பருத்தித்துறை | டிசெம்பர், 2002 | 50,000 |
| 56. அருள்மிகு ஞானவைரவர் ஆலயம், சிறுப்பிட்டி | டிசெம்பர், 2002 | 100,000 |
| 57. அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், கோப்பாய் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 58. அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் ஆலயம், அளவெட்டி மேற்கு | டிசெம்பர், 2002 | 50,000 |
| 59. நாவலடி பேச்சி அம்மன் தேவஸ்தானம், வண்ணார்பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம் | டிசெம்பர், 2002 | 50,000 |
| 60. ஸ்ரீ வள்ளியம்மை ஆலயம், கைதடி | டிசெம்பர், 2002 | 50,000 |
| 61. விளாவெளி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி | டிசெம்பர், 2002 | 50,000 |
| 62. தவசிகுளம் கண்ணகை அம்பாள் ஆலயம், கொடிகாமம் | டிசெம்பர், 2002 | 50,000 |
| 63. முள்ளியான் மண்டலப் பிள்ளையார்கோயில், புலோலி மேற்கு, பருத்தித்துறை | டிசெம்பர், 2002 | 50,000 |
| 64. ஆலடிப் பிள்ளையார் கோயில், புலோலி மேற்கு, பருத்தித்துறை | டிசெம்பர், 2002 | 50,000 |
| 65. அருள்மிகு ஸ்ரீ கதிர்காம சுவாமி ஆலயம், காரைநகர் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 66. நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம், நவாலி தெற்கு,மானிப்பாய் | டிசெம்பர், 2002 | 100,000 |
| 67. மீசாலை காட்டுவளவு நெல்லியடி கந்தசுவாமி கோயில் | டிசெம்பர், 2002 | 50,000 |
| 68. மாவடிப் பிள்ளையார் ஆலயம், கரவெட்டி | டிசெம்பர், 2002 | 25,000 |
| மொத்தம் | | 4,75,000 |

### புனரமைப்பு பணிகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்ட இந்து நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| 01. வாழ்வகம், மருதனார்மடம், சுன்னாகம் | 25.10.2002 | 500,000 |
| 02. சர்வதேச இந்துகுருமார் ஒன்றியம், நீராவியடி,யாழ். | 13.11.2002 | 500,000 |
| 03. இந்துசமய கலாசார அபிவிருத்திச் சபை, நாவற்குழி,கைதடி | 15.11.2002 | 500,000 |
| 04. தரிசனம், மட்டக்களப்பு | 25.10.2002 | 150,000 |
| 05. சின்மயா மிஷன், கொழும்பு | 27.11.2002 | 25,000 |
| 06. சைவ வித்தியாவிருத்திச் சங்கம், திருநெல்வேலி | டிசெம்பர் 2002 | 200,000 |
| 07. திக்கரை கிராம இந்து அபிவிருத்திச்சங்கம், காரைநகர் (தில்லை மயானக் கட்டடம் அமைப்பதற்கு) | டிசெம்பர் 2002 | 200,000 |
| 08. திக்கரை கிராம இந்து அபிவிருத்திச் சங்கம், காரைநகர் அறநெறிப் பாடசாலையை புனரமைப்பதற்கு | டிசெம்பர் 2002 | 100,000 |
| மொத்தம் | | 2,175,000 |

### அன்னதானம் வழங்குவதற்காக நிதியுதவி வழங்கப்பட்ட ஆலயங்கள்

| | | |
|---|---|---|
| 01. தும்பளை இலட்சுமணன்தோட்டப் பிள்ளையார் ஆலயம், பருத்தித்துறை | 26.11.2002 | 100,000 |
| 02. ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், சித்தாண்டி, மட்டக்களப்பு | 22.11.2002 | 100,000 |
| 03. ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் முத்துமாரியம்மன் ஆலயம், மட்டக்களப்பு | டிசெம்பர் 2002 | 100,000 |
| 04. நெடுவினி ஸ்ரீ சித்திவிநாயகர் அன்னதான சபை, நெடுந்தீவு | டிசெம்பர் 2002 | 50,000 |
| மொத்தம் | | 350,000 |

### ஆலயங்கள்/இந்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களின் விவரம்:

| ஆலயத்தின் பெயர் | வழங்கப்பட்ட திகதி | வழங்கப்பட்ட தொகை (ரூபாவில்) |
|---|---|---|
| எல்வ் வான் | | |
| 01. சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டமானாறு | 2002.11.15 | 1,000,000 |
| முச்சக்கர வண்டி | | |
| 01. சாரதா சேவா ஆச்சிரமம், பருத்தித்துறை | 02.09.2002 | 190,980 |
| 02. ஸ்ரீ காயத்திரி காமகோடிபீடம், மீசாலை | 19.01.2002 | 190,980 |
| 03. ஆலய சேவாசங்கம், தோப்புக்காடு, காரைநகர் | 19.01.2002 | 190,980 |
| 04. அகில இலங்கை திருமுறை மன்றம், நல்லூர், யாழ்ப்பாணம் | 07.10.2002 | 190,980 |
| 05. சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் | 11.10.2002 | 190,980 |
| 06. யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் | 24.10.2002 | 190,980 |
| 07. யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் | 24.10.2002 | 190,980 |
| 08. யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் | 24.10.2002 | 190,980 |
| 09. புளியங்கூடல் இந்து முத்து விநாயகர் ஆலயம் | 25.10.2002 | 190,980 |
| 10. ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம், சிறுப்பிட்டி, நீர்வேலி | 25.10.2002 | 190,980 |
| 11. செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம், யாழ்ப்பாணம் | 26.10.2002 | 190,980 |
| 12. அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை, யாழ்ப்பாணம் | 28.10.2002 | 190,980 |
| 13. ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில், நயினாதீவு | 29.10.2002 | 190,980 |
| 14. மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லம், மட்டக்களப்பு | 01.11.2002 | 190,980 |
| 15. விழிப்புலனற்றோர் இல்லம் தரிசனம், மட்டக்களப்பு | 05.11.2002 | 190,980 |
| 16. யோகர்சுவாமி சைவ மகளிர் இல்லம், சித்தாண்டி, மட்டக்களப்பு | 30.10.2002 | 190,980 |
| 17. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில், வவுனியா | 01.11.2002 | 190,980 |
| 18. மகாதேவா ஆச்சிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி | 08.11.2002 | 190,980 |
| 19. கிராம இந்து அபிவிருத்திச் சங்கம், வாதரவத்தை | 08.11.2002 | 190,980 |
| 20. கொற்றாவத்தை செட்டித்தறை சித்திவிநாயகர் ஆலயம், கரவெட்டி | 08.11.2002 | 190,980 |
| 21. தும்பளை இலட்சுமணத் தோட்டப் பிள்ளையார் ஆலயம், பருத்தித்துறை | 07.11.2002 | 190,980 |
| 22. வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம், காரைநகர் | 05.11.2002 | 190,980 |
| 23. வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், மருதனார்மடம், சுன்னாகம் | 24.10.2002 | 190,980 |
| 24. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம், துன்னாலை, கரவெட்டி | 15.11.2002 | 190,980 |
| 25. சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம், நீராவியடி, யாழ்ப்பாணம் | 14.11.2002 | 190,980 |
| 26. யாழ்.பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம் | 27.11.2002 | 190,980 |
| 27. ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், தாவடி | 26.11.2002 | 190,980 |
| 28. ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், சுதுமலை | 26.11.2002 | 190,980 |
| 29. ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலயம், நயினாதீவு | 26.11.2003 | 190,980 |
| 30. மகாசிறி வித்தியா சர்வதேச இந்துமதபீடம், கொழும்பு | 26.11.2002 | 190,980 |
| 31. மீனாட்சியம்மன் கோயில், நீர்வேலி | 04.12.2002 | 190,980 |
| 32. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு | 04.12.2002 | 190,980 |
| 33. கிருஷ்ணன் கோயில், பொன்னாலை | டிசெம்பர், 2002 | 190,980 |
| 34. சிவதொண்டன் நிலையம், யாழ்ப்பாணம் | டிசெம்பர், 2002 | 190,980 |
| 35. வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயம் | டிசெம்பர், 2002 | 190,980 |
| 36. வழக்கம்பரை அம்மன் கோயில், யாழ்ப்பாணம் | டிசெம்பர், 2002 | 190,980 |
| 37. நெல்லியடி முருகன் கோயில், பருத்தித்துறை | டிசெம்பர், 2002 | 190,980 |
| 38. கலிகை முருகன் கோயில், துன்னாலை தெற்கு, கரவெட்டி | டிசெம்பர், 2002 | 190,980 |
| 39. வைரவர் கோயில், ஏழாலை | டிசெம்பர், 2002 | 190,980 |
| 40. ஸ்ரீ நாகேஸ்வரம் கோயில், அளவெட்டி | டிசெம்பர், 2002 | 190,980 |
| 41. ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் ஆலயம், தெல்லிப்பழை | டிசெம்பர், 2002 | 190,980 |
| 42. தில்லைவம்பல அம்மன் கோயில், கோண்டாவில் | டிசெம்பர், 2002 | 190,980 |
| 43. நாவலர் மணிமண்டபம், யாழ்ப்பாணம் | டிசெம்பர், 2002 | 190,980 |
| 44. உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம் | டிசெம்பர், 2002 | 190,980 |
| 45. இந்து சமய கலாசார அபிவிருத்திச் சபை, நாவற்குழி, கைதடி | டிசெம்பர், 2002 | 190,980 |
| 46. போச்சுட்டி முருகமூர்த்தி கோயில், காரைநகர் | டிசெம்பர், 2002 | 190,980 |
| 47. சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் | டிசெம்பர், 2002 | 190,980 |
| 48. சிவானந்த தபோவனம், திருகோணமலை | டிசெம்பர், 2002 | 190,980 |
| 49. கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய் | டிசெம்பர், 2002 | 190,980 |
| 50. பெரியதம்பிரான் ஆலயம், பருத்தித்துறை | டிசெம்பர், 2002 | 190,980 |
| ** 50 முச்சக்கர வண்டிகளுக்குமான காப்புறுதிச் செலவு, பெயர்பொறித்தற் செலவு, முச்சகரவண்டியைக் கொண்டுவருவதற்கான எரிபொருள் செலவு, சாரதி கூலி மற்றும் இதர செலவுகள் | | 138,275 |
| மொத்தம் | | 10,687,275 |

**ஆலயங்களுக்கும்/இந்து நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட வாகனங்களின் பதிவுகள் யாவும் எமது அமைச்சின் பெயரிலேயே உள்ளன.**

### பொழிப்பு:

| விவரம் | தொகை |
|---|---|
| 01. ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதியுதவி | 4,775,000 |
| 02. இந்து நிறுவனங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்பட் நிதியுதவி | 2,175,000 |
| 03. ஆலயங்களில் அன்னதானம் வழங்குவதற்காக வழங்கப்பட்ட நிதியுதவி | 350,000 |
| 04. இந்து ஆலயங்களுக்கும்/இந்து நிறுவனங்களுக்குமாக வழங்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி | 10,687,275 |
| மொத்தம்: | 17,987,275 |

### இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
### இந்து சமய மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

1. தமிழர் பாரம்பரியத்தை வெளிப்படுத்தக்கூடிய வகையில் நடத்தப்பட்ட தைப்பொங்கல் விழா

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 14.01.2002 | 103,138.50 |
| இரத்தினபுரி | 19.01.2002 | 30,000.00 |
| புத்தளம் | 25.01.2002 | 30,500.00 |
| மட்டக்களப்பு | 26.01.2002 | 50,000.00 |
| கொழும்பு | 28.01.2002 | 86,273.50 |

# அலுவலல்கள் அமைச்சு
# ...ற்ற அறிக்கை - 2002

...து இன்று (திங்கட்கிழமை) மாண்புமிகு அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் நா.உ. அவர்கள் உரையாற்றுகிறார். இந்த அமைச்சினால் ...தின் அரைப்பகுதி மட்டக்களப்பு தரிசனம், மறுபகுதி மருதனார்மடம் வாழ்வகம் ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 02. ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் சுதந்திர தின விழா விசேட பூசை | 04.02.2002 | 3,320.00 |
| 03. மகா சிவராத்திரி விழா திருக்கேதீஸ்வரம் | 12.03.2002 | 52,790.00 |
| திருக்கோணேஸ்வரம் | 12.03.2002 | 50,000.00 |
| 04. நவராத்திரி விழா (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்) | 15.10.2002 | 11,351.75 |
| 05. இந்திய நாதஸ்வர இசைக் கலைஞர்களால் இசைக்கச்சேரி நடத்தியமை (கொழும்பில்) | 16.03.2002 | 37,740.00 |
| 06. இந்திய, இலங்கை சொற்பொழிவாளர்களால் 11இந்து சமய சொற்பொழிவுகள் நடத்தியமை யாழ்ப்பாணம் | 28.07.2002 | |
| திருகோணமலை | 31.07.2002 | |
| திருகோணமலை | 20.10.2002 | |
| கொழும்பு | 27.07.2002 | |
| கொழும்பு | 12.10.2002 | |
| மட்டக்களப்பு (இந்துக் கல்லூரி) | 09.06.2002 | |
| விபுலானந்த இல்லம் மட்டக்களப்பு | 11.06.2002 | |
| ஸ்ரீ முருகன் ஆலயம் மட்டக்களப்பு | 11.06.2002 | |
| மட்டக்களப்பு | 10.06.2002 | |
| அக்கரைப்பற்று | 12.06.2002 | |
| பலாங்கொடை | 23.09.2002 | 79,343.00 |
| 07) நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய சொற்பொழிவுகள், பண்ணிசை வகுப்புகள் மற்றும் சமய வகுப்புகள் நடத்தப்படுதல் | 06.09.2002 இலிருந்து | 14,886.00 |
| 08) கர்நாடக இசைக்கச்சேரி காளிகோயில் திருகோணமலையில் நடத்தப்பட்டது | 11.08.2003 | 787.00 |
| மொத்தம் | | 550,129.75 |

## பிற இந்து கலாசார நடவடிக்கைகள்

| | | |
|---|---|---|
| 01. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பின்தங்கிய 140 இந்து மாணவர்களுக்கு தென் பகுதி சுற்றுலா ஒன்றை ஏற்படுத்திக்கொடுத்தமை | 22.05.2002 | 70,340.00 |
| 02. ஆடிவேல் ரத பவனி மாண்புமிகு பிரதமரது வாசஸ்தலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 23.07.2002<br>26.07.2002 | 36,797.00 |
| 3) திருமுறை விழா யாழ்ப்பாணம், சங்கானை கல்விக் கோட்டத்தில் நடத்தப்பட்டது. | 05.10.2002 | 25,000.00 |
| மொத்தம் | | 132,137.00 |

## குருகுலக் கல்வி அபிவிருத்தி

| | | |
|---|---|---|
| 01. 35 அந்தணச் சிறுவர்களின் குருகுலக் கல்விக்காக | 03.05.2002 | 30,000.00 |
| கொழும்பு ஸ்ரீ வித்தியா பீடத்துக்கு வழங்கப்பட்டது. | 30.07.2002 | 30,000.00 |
| 02. போர்ச்சூழல் நிலவியபோது ஆலயங்களில் நித்திய பூசை நடைபெறத் தொண்டாற்றிய இந்துக் குருமாருக்கான கௌரவிப்பு | 22.06.2002<br>23.06.2002<br>24.06.2002 | 66,645.00 |
| மொத்தம் | | 126,645.00 |

## இந்து சமய கலாசார ஆராய்ச்சி

| | | |
|---|---|---|
| 01. தமிழ் புது வருடப் பஞ்சாங்கம் 10 ஆயிரம் பிரதிகளும் 600 தமிழ்ப் புதுவருட வாழ்த்து மடல்களும் அச்சிட்டு மக்களுக்கும், இந்து நிறுவனங்களுக்கும் வழங்கியமை | ஏப்ரல், 2002 | 81,160.00 |
| 02. இந்து கலைக் களஞ்சியம் 6ஆவது தொகுதிக்கான ஆய்வுக் கட்டுரை எழுதுதல் | 2002 | 37,713.00 |
| 03. சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள் என்னும் தலைப்பில் 3 நாள்கள் ஆய்வரங்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டமை | 22.06.2002<br>23.06.2002<br>24.06.2002 | 232,838.00 |
| 04. பண்பாட்டு பருவ இதழ் மே 2002 ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு வழங்கியமை | மே 2002 | 26,816.00 |
| 05. கிடைத்தற்கரிய நூல்களின் பிரதிகள் அச்சிடப்பட்டமை பாரத அம்மானை 1000 பிரதிகள் இந்து கலாசாரம் நடனங்களும் ஓவியங்களும் 1000 பிரதிகள் | 2002 | 283,610.00 |
| மொத்தம் | | 661,137.00 |

## இந்து கலை, கலாசார மேம்பாடு

| | | |
|---|---|---|
| 1. எழுத்தாளர்களிடமிருந்து 77 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. (இலக்கிய நூற்பிரதிகள் 2,321, சமய நூற்பிரதிகள் 514) | 2002 | 360,000 |
| 2. கலாபூஷண விருது வழங்கல் 2001 27 கலைஞர்கள் 2002 21 கலைஞர்கள் | 19.12.2002 | 480,000 |
| 3. நாட்டுப்புறக் கலைக்கூத்துக்களான வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி என்பவற்றை ஒலிப்பதிவு செய்து ஆவணப்படுத்தியமை. | 30.04.2002 | 23,665 |
| 4. இலங்கைக் கலைஞர்கள் பங்குபற்றிய இயல், இசை பாரம்பரிய கலையரங்கு நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது | 22.06.2002<br>23.06.2002<br>24.06.2002 | 108,367 |
| மொத்தம் | | 972,032 |

## இந்து அறநெறிப் பாடசாலை அபிவிருத்தி

| | | |
|---|---|---|
| 01. நூல்கள் அச்சிடுதல் ஆறுமுகநாவலரது சைவ வினாவிடை 20 ஆயிரம் பிரதிகள் ஆறுமுகநாவலரது பாலர்பாடம் 10 ஆயிரம் பிரதிகள் (17 மாவட்டங்களைச் சேர்ந்த 814 அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டமை) | ஏப்ரல் 2002 | 894,681 |
| 02. அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கும் செயலமர்வும் யாழ்ப்பாணம் மாவட்டம், தெல்லிப்பழை | 06.09.2002 | |
| ஊர்காவற்றுறை | 03.10.2002 | |
| உடுவில் | 03.10.2002 | |
| தென்மராட்சி | 03.10.2002 | |
| கரவெட்டி | 03.10.2002 | |
| திருகோணமலை நகரம் | 16.07.2002 | |
| திருகோணமலை நகரம் | 09.09.2002 | |
| மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை மேற்கு | 03.10.2002 | |
| களுவாஞ்சிக்குடி | 14.08.2002 | |
| அம்பாறை மாவட்டம் | 07.10.2002 | |
| வவுனியா மாவட்டம் | 07.10.2002 | |
| கொழும்பு மாவட்டம் | 16.09.2002 | |
| இரத்தினபுரி மாவட்டம் | 05.10.2002 | |
| கேகாலை மாவட்டம் | 30.09.2002 | |
| புத்தளம் மாவட்டம் | 16.10.2002 | |
| கண்டி மாவட்டம் | 16.11.2002 | |
| மாத்தளை மாவட்டம் | 16.11.2002 | 244,469 |
| (421 பாடசாலைகளைச் சேர்ந்த 1082 ஆசிரியர்கள்) | | |

| | | |
|---|---|---|
| 03. சீருடை விநியோகம்: மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 310 வறிய மாணவர்கள் | 12.03.2002 | 363,738 |
| 04. இசைக் கருவிகள் வழங்கல். 15 தபேலா, 15 காமோனியம், 100 சுருதிப்பெட்டிகள், 100 தாளம் என்பன 130 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. | ஏப்ரல் 2002 | 430,750 |
| 05. இந்து அறநெறிப் பாடசாலைப் பரீட்சைகள் இந்து அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சை நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டமை. | 26.10.2002<br>27.10.2002 | 383,275 |
| மொத்தம் | | 2,336,913 |

## பிற அரச நிறுவனங்களுடனான செயற்பாடுகள்

| | | |
|---|---|---|
| மத்திய மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவிற்கு எமது திணைக்களத்தின் கலாசார ஊர்தி ஒன்று அனுப்பப்பட்டது | 23.11.2002<br>24.11.2002 | 23,900 |

## நிதியுதவிகள்

| | | |
|---|---|---|
| 01. யாழ்ப்பாணத்திலுள்ள 221 வறிய மாணவர்களுக்குத் தலா ரூபா 500/= வீதம் வழங்கப்பட்டது | 22.06.2002<br>23.06.2002<br>24.06.2002 | 110,500 |
| 02. இந்துப் பண்பாட்டு நிதியத்துக்கான நிதியுதவி | 10.06.2002 | 200,000 |
| மொத்தம் | | 310,500 |

## ஆலயங்களுக்கான உபகரணங்கள் வழங்கல்

01. யாழ்ப்பாண மாவட்டத்தில் மின்சார வசதிகள் இல்லாத பகுதிகளில் உள்ள 15 ஆலயங்களுக்கு சூரிய மின் பிறப்பாக்கிகள் வழங்கியமை.

| | | |
|---|---|---|
| 01. கலிகை முருகன் ஆலயம், துன்னாலை தெற்கு, கரவெட்டி. (07 விளக்குகள்) | 05.04.2002 | |
| 02. அளவெட்டி நாகேஸ்வரர் ஆலயம், அளவெட்டி. (07 விளக்குகள்) | 05.04.2002 | |
| 03. சிறுப்பிட்டி வைரவர் ஆலயம், கோப்பாய். (07 விளக்குகள்) | 05.04.2002 | |
| 04. கனகாம்பிகை சமேத கனகலிங்கேஸ்வரர் ஆலயம், வட்டுக்கோட்டை (07 விளக்குகள்) | 05.04.2002 | |
| 05. திக்கரை முருகமூர்த்தி ஆலயம், காரைநகர் (05 விளக்குகள்) | 05.04.2002 | |
| 06. புளியங்கூடல் இந்தியடி பிள்ளையார் ஆலயம், ஊர்காவற்றுறை (05 விளக்குகள்) | 05.04.2002 | |
| 07. நாயன்மார்கட்டு அரசடி விநாயகர் ஆலயம், நல்லூர். (05 விளக்குகள்) | 05.04.2002 | |
| 08. கைதடி பிள்ளையார் ஆலயம், கைதடி (5 விளக்குகள்) | 05.04.2002 | |
| 09. தும்பளை இலட்சுமணன் தோட்டப் பிள்ளையார் ஆலயம் (5 விளக்குகள்) | 05.04.2002 | |
| 10. முத்துமாரியம்மன் ஆலயம், வேலணை (5 விளக்குகள்) | 05.04.2002 | |
| 11. ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம், நயினாதீவு (5 விளக்குகள்) | 05.04.2002 | |
| 12. மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய் (5 விளக்குகள்) | 05.04.2002 | |
| 13. பெரியதம்பிரான் ஆலயம், பருத்தித்துறை (5 விளக்குகள்) | 05.04.2002 | |
| 14. சிவன் கோவில், காரைநகர் (5 விளக்குகள்) | 05.04.2002 | |
| 15. ஸ்ரீ போதீஸ்வரர் ஆலயம், கரவெட்டி (5 விளக்குகள்) | 05.04.2002 | 660,864 |
| 02. நாவலர் மணி மண்டபத்திற்கான ஒலிபெருக்கி வழங்கல் | 23.08.2002 | 101,954 |
| 03. களுத்துறை நேபொட முத்துமாரியம்மன் கோவிலுக்கு இசைக்கருவிகள் வழங்கல் | 19.08.2002 | 13,954 |
| 04. இந்தியாவில் இருந்து பித்தளையில் குத்துவிளக்கு, வாசமாலை, நடராஜர், சிவகாமி சுவாமி, சிலைகள், பூசை மணிகள் போன்ற ஆலய பூசை உபகரணங்களின் மாதிரிகள் இறக்குமதி செய்யப்பட்டமை. | செப். 2002 | 468, 903 |
| 05. இந்து (நந்தி) கொடி அச்சிட்டு இலவசமாக ஆலயங்கள், இந்து நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளமை. | 28.08.2002 | 91,500 |
| | 29.08.2002 | 91,500 |
| | 05.12.2002 | 91,500 |
| 06. நாயன்மார்களுடைய நால்வர் படம் 2000 பிரதிகள் அச்சிட்டு இலவசமாக ஆலயங்கள், இந்து நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளமை | 22.10.2002 | 11,850 |
| மொத்தம் | | 1,532, 025 |

## ஆலயங்களுக்கு நித்திய பூசை வழிபாட்டிற்காக நிதியுதவி வழங்கல்

| ஆலயத்தின் பெயர் | வழங்கப்பட்ட திகதி | வழங்கப்பட்ட தொகை (ரூபாவில்) |
|---|---|---|
| 01. கோப்பாய் தெற்கு அத்திதோட்டம் அருள் மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயம், கோப்பாய் | 11.06.2002 | 10,000 |
| 02. ஸ்ரீ வெள்ளிமயில் விநாயகர் ஆலயம், உத்துச்சேனை, வெளிகந்தை | 13.08.2002 | 10,000 |
| 03. கற்பக விநாயகர் ஆலயம், கொழும்பு இந்துக் கல்லூரி இரத்மலானை | 04.10.2002 | 10,000 |
| 04. ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம் வட்டவளை, நுவரெலியா | 21.11.2002 | 10,000 |
| 05. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், டெல்கத் அரசயாக்கம், கொம்பல் டிவிசன், பதுரவில | 21.11.2002 | 5,000 |
| 06. ஸ்ரீ பாமநபினார் ஆலயம் கல்விட்டு திண்ணையடி, ஆரயம்பதி - 1 மட்டக்களப்பு | 13.11.2002 | 10,000 |
| 07. விக்னேஸ்வரர் பிள்ளையார் ஆலயம், புதுக்குடியிருப்பு 4, ஆரயம்பதி. | 13.11.2002 | 5,000 |
| 08. ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், எலகல, கம்மடுவ | 21.11.2002 | 10,000 |
| 09. திருநீற்றுக்கேணி சிவசக்தி முருகன் ஆலயம், 4ஆம் குறிச்சி, களுதாவளை, களுவாஞ்சிக்குடி | 13-11-2002 | 10000 |
| 10. ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், இல.59 எத்தானை தோட்டம், கம்பொல பிரிவு | 21-11-2002 | 5,000 |
| 11. ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் றாக்கரசல் தோட்டம், தெரணியகல | 21-11-2002 | 5,000 |
| 12. அருள்மிகு ஐயனார் கோவில், வன்னேரிக்குளம், கிளிநொச்சி | 21-11-2002 | 10,000 |
| 13. ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், வெல்லாவெளி | 13-11-2002 | 10,000 |
| 14. ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயம், பழுகாமம் 2. பெரிய போரதீவு | 13.11.2002 | 10,000 |
| 15. மாணிக்கபிள்ளையார் ஆலயம், உருத்திரபுரம் | 21.11.2002 | 10,000 |
| 16. சிவன் ஆலயம், சிவகிராமம், கிளிநொச்சி | 21.11.2002 | 10,000 |
| 17. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் கந்துவெல் வீதி, நொச்சியாகம | 21.11.2002 | 10,000 |
| 18. உருத்திரவேங்கை வைரவர், [illegible], கிளிநொச்சி | 21.11.2002 | 10,000 |
| 19. வேல்முருகன் ஆலயம், [illegible] | 13.11.2002 | 10,000 |
| 20. ஸ்ரீ கற்பக விநாயகர், [illegible], முள்ளியவளை | 21.11.2002 | 10.000 |
| 21. ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், [illegible]ழையஊர், செங்கலடி. | 13.11.2002 | 10,000 |
| 22. நடனமுத்துமாரியம்மன் ஆலயம், [illegible]ந்தியடி, ஸ்கந்தபுரம் கிளிநொச்சி | 21.11.2002 | 10,000 |
| 23. ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், [illegible]லம்பிட்டி, விடத்தல்தீவு, மன்னார். | 22.11.2002 | 10,000 |
| 24. ஸ்ரீ [illegible]பிள்ளையார் ஆலயம், [illegible]டத்தடி, திருகோணமலை. | 21.11.2002 | 10,000 |
| மொத்தம் | | 22[illegible],000 |

(12ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள குயின்கி (Qingqi - Q.M. 100) மோட்டார் சைக கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.அரியதாசன், பாடசாலை ஒழுங்கை, (விசாலாட்சி வித்தியாசாலை), காங் கேசன்துறை வீதி, மல்லாகம். (11523)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மத்திய சந்தைக்கு முன் ஒழுங்கையில் 31/4 பரப்புக் காணி, வீடு, கிணற்றுடன் விற்ப னைக்கு உண்டு. தொடர்பு: ஆ.சிவ ராஜா, கூழாவடி தபால் கந்தோ ருக்கு அருகில், 04ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (11208)

## வீடும் காணியும் விற்பனைக்கு

31/2 பரப்புக் காணியில் நன்னீர்க் கிணற்றுடன் அமைந்த வீடும் 21/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 193, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 01728912 (11487)

## கார் விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பில் இருக்கும் 7சிறி-இலக்கமுடைய மொறிஸ் மினா கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.வின்சன், 17/2 A, புனித அன்ன மாள் ஒழுங்கை, சுண்டுக்குளி. (11403)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler (குஞ்சு 35/-), அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 12-12-2002 வியாழக் கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டி பதிவு செய்யவும். இல.19, முருகேசர் ஒழுங்கை. முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11440)

## வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப் பட்ட பல இன வளர்ப்பு மீன்கள் (கற்பிஸ், அக்ரா, பேஸ்கைல், றெற்றா, கோல்ட்பிஸ், ஏஞ்சல் மற்றும் ஏனை யவை) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: K.குமார், இல.95, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு (சந்தை அருகில்). (11544)

## விற்பனைக்கு உண்டு

ELF 350 வாகனின் (BODY) மரப் பெட்டியும், உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு. வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

அண்ணா பாம்,
ஸ்ரேசன் றோட்,
இணுவில்.
(சி-25286)

## வீடு வாடகைக்குத் தேவை

மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் (தளபா டங்களுடன் விரும்பத்தக்கது) கூடிய வீடு வெளிநாட்டவர் வசிப் பதற்கு வாடகைக்குத் தேவை. தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
222 3779
222 5106
222 5105 (11479)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 2459

## ஆங்கில வகுப்புகள்

ஆண்டு 6-13 வரையான மாண வர்களுக்கும் பல்கலைக்கழக மாண வர்களுக்கும் ஏனையவர்களுக்கும் ஆங்கிலம் அடிப்படையிலிருந்து கற் பிக்கப்படும். ஆரம்பம்: 10-12-2002. தொடர்பு: நாகேந்திரம், 34/4, செட்டித தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (11374)

## தவறிவிட்டது

அரியாலை, நாவலடியைச் சேர்ந்த தியாகராசா அகிலன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.683111864V) உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கும், உரும்பிராய் வடக்கு அன்னமார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இ.இராசலிங்கம் உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (11551)

4ஆம் வட்டாரம், புங்குடுதீவு மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த தனபாலசிங்கம் செந்தூரன் என்பவ ரது தேசிய அ.அட்டை (811952290V) 28.11.2002 அன்று முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 38, காரைக்காட்டு லேன், வண்ணார் பண்ணை என்னும் முகவரியில் ஒப் படைத்துதவவும். (11554)

## சுற்றுப்பயணம் மேற்கொள்ள ஹக்கீம் திட்டம்

கொழும்பு,டிசெ.9

தமக்கெதிரான சதி முயற்சி குறித்து விளக்கமளிக்க வடக்கு - கிழக்கில் சுற்றுப்பயணங்களை மேற் கொள்ளவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூக் ஹக்கீம் தெரிவித்தார். மூதூரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே அமைச்சர் ரவூக் ஹக்கீம் இதனைத்தெரிவித்தார்.

## அரியாலையில் புலமைப்பரிசில் உதவித் திட்டம்

கொழும்புத்துறை,டிசெ.9

அரியாலை அபிவிருத்திச் சங் கத்தினால் வருடாந்தம் செயற்படுத் தப்படும் தரம் 5இற்கான புலமைப் பரிசில் உதவித் திட்டம் இம்முறை யும் வழங்கப்படவிருக்கிறது.

அரியாலை மக்களுக்கு வழங் கப்படும் இந்த உதவித் திட்டத்தில் வறுமைக்கோட்டில் வாழ்வோருக்கும், பெற்றோரை இழந்த பிள்ளைகளுக் கும் முன்னுரிமை அளிக்கப்படும் என அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்தார். (ஒ-30)

## விழிப்புக்குழு அமைப்பு

கொழும்புத்துறை ஆனந்தன்வட லிப் பகுதியில் இரவுவேளைகளில் திரு டர்கள் மற்றும் விசமிகளின் நடமாட் டம் அதிகரித்திருப்பதையடுத்து அப் பகுதி இளைஞர்கள் விழிப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளனர். (எ-30)

## இதோ மலிவு விற்பனை!

2003 பாடசாலை ஆரம்பத்தை முன்னிட்டு
09.12.2002 இன்றுமுதல் 15.01.2003 தைப்பொங்கல்வரை
தரமோ மிகவும் உயர்வு! விலையோ மிகவும் மலிவு!!
உங்களுக்குத் தேவையான பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள்
முதல் சகல பொருள்களையும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயஞ் செய்யுங்கள்.

புதிய பெயர்: துர்க்கை அம்பாள் புத்தகசாலை
தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.
(11560) பழைய பெயர்: ஆசீர்வாதம் புத்தகசாலை



உ
சிவமயம்

## வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

### விநாயகர் சஷ்டி விரதம்

காலம்: இன்று (09.12.2002) திங்கட்கிழமை
நேரம்: காலை 7மணி

மு.ப.7 மணி காலைப் பூஜை
9 மணி கலச சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பம்.
10.30 கணபதி ஓமம்
11.15 கலச சங்காபிஷேகம்
நண்பகல் 12 மணி உச்சிக்காலப் பூஜை
12.30 பஞ்சமுகார்ச்சனை
பி.ப. 4மணி பிள்ளையார் கதைப் படிப்பு விநாயகர் புராணபடனம் பூர்த்தி
5 மணி சாயரட்சைப் பூஜை
5.15 வசந்த மண்டப பூஜை
5.30 ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் உற்சவமும் கஜமுகசூரன் போரும்

உபயம்: அற்புதா றேடிங் கம்பனி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-25301)

## யப்பான் சைக்கிள்

முற்றுமுழுதாக யப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள் சைக்கிள்கள்



☆ மிதிப்பதற்கு மிகவும் இலகுவானவை
☆ பெல், பூட்டு, டைனமோ சகிதம்
☆ எந்த உதிரிப்பாகமும் மாற்றீடு செய்யக்கூடியது

உடனே விஜயஞ் செய்யுங்கள்:

MURUGAA AGENCY
பிறவுண் றோட் சந்தி - நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(11556)

ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ்

யாழ்.நகரில்

## சைக்கிள் விற்பனையில் முன்னணி வகிப்பவர்கள்



## ஈஸ்வரன் ரேடர்ஸ்

HERO - LUMALA நீடித்த பாவனைக்கு நீங்கள் என்றும் தயங்காது வாங்குங்கள்




ஹீரோ, லுமாலா சைக்கிள்கள்




✷ ஹீரோ குடும்ப அங்கத்தவராக அங்கீகரிக்கப்பட்ட யாழ்.மண்ணில் முன்னணி வர்த்தக நிறுவனம் இதுவே!

✷ யாழ். - கொழும்பு - யாழ். போக்குவரத்துச் சேவையில் பொருள்களை உடனடியாகத் துரித கதியில் பெற்றுக்கொள்ளலாம்.

✷ அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறையினருக்கும் இலவச (பொருள்கள்) காப்புறுதியுடன் கூடிய துரித சேவைகள்!

அனைத்துக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

## ஈஸ்வரன் ரேடர்ஸ்

போக்குவரத்துச் சேவைத் தொடர்புகளுக்கு:- (U/2484)

| யாழ்ப்பாணத்தில் | வவுனியாவில் | கொழும்பில் |
|---|---|---|
| 69, கஸ்தூரியார் வீதி, | 148, கண்டி வீதி, | 132, டாம் வீதி, |
| T.P: 021-222-2813 | T.P: 024-22497 | கொழும்பு - 12 |
| | | T.P: 074-714312 |

HOT LINE : T.P : 0777 -674119

ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ்

# வாசகர் திருமுகம்

## 'உதயன்' வாசகரின் ஆதங்கம்

'உதயன்' பத்திரிகையின் அபிமான வாசகர்களில் நானும் ஒருவன். கடந்த பல வருடங்களாக நான் பத்திரிகையைப் படித்து வருகின்றேன். 30.11.2002 அன்று காலை பத்திரிகை முகவர் கடைக்குச் சென்றேன். பத்திரிகை வரவில்லை. மோட்டார் சைக்கிளுடன் பத்திரிகை வருகின்றதா என்று காவல் நின்றேன். காலை 7.15 மணியளவில் பத்திரிகை வந்தது. மிகவும் ஆவலாகப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு எனது கடைக்கு ஓடினேன். முதல்வேலை பத்திரிகை பார்ப்பதுதான். பக்கங்களைப் புரட்டினேன். ஆனால், அதில் புதினங்களைவிட அதிக பக்கங்கள், அதிக கலம்கள் விளம்பரத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருநந்தது. மனம் சலித்துவிட்டது. வேறு பத்திரிகை எடுப்போமா என்ற மனநிலை தோன்றிவிட்டது. விளம்பரத்திற்காகவா இப்பத்திரிகை வெளியிடப்படுகின்றது என்ற அபிப்பிராயம் எனது மனதில் தோன்றியது. இக்கருத்து வாசகர்கள் பலர் மத்தியிலும் தோன்றியிருக்கக்கூடும். எனவே, அபிமானமான வாசகர் பத்திரிகையான 'உதயன்' பத்திரிகையில் உலக, உள்நாட்டு, விளையாட்டுப் புதினங்களுக்க முக்கியத்துவம் கொடுக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் வாசகர் திருமுகத்தில் இதனை பிரசுரிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

*பிரதான வீதி,*
*சங்கானை.*

**அபிமான வாசகன்**
**க.கனகசபை**

## வங்கிகளா அன்றி லொத்தர் சபைகளா?

அண்மைக்காலமாக நாட்டில் உள்ள வங்கிகள் ஒவ்வொன்றும் லொத்தர் சபையாக மாறி வருகின்றன.

வைப்புகளுக்கு வழங்கப்பபடும் வட்டி வீதத்தை மிக மிகக் குறைத்து, அதிர்ஷ்ட சீட்டிழுப்புகள் நடத்தி கவர்ச்சியான பரிசுகள் வழங்கி, வைப்புகளைப் பெறுவதற்கு வங்கிகள் போட்டி போடுகின்றன.

சாதாரணமாக வைப்புக்கள் தேவைப்படும்போது வங்கிகள் வட்டி வீதத்தைக் கவர்ச்சிகரமாக உயர்த்தி வைப்புக்களைத் தம்பால் கவர்ந்தன. வைப்புக்களுக்கான கேள்வி குறையும்போது வட்டி வீதத்தைக் குறைத்துக்கொண்டன. இதுதான் வங்கிகளால் மேற்கொள்ளப்படும் நடைமுறை.

ஆனால், தற்போது வட்டி வீதத்தைக் கூட்டி வைப்புக்களைத் தம்பால் கவர்வதற்குப் பதிலாக கவர்ச்சிகரமான பரிசுத்திட்டங்ளை அறிமுகப்படுத்தி வைப்புக்களைப் பெறுகின்றன. வட்டிவீதம் மிகமிகக் குறைக்கப்படுகின்றது.

கஷ்டப்பட்டு சம்பாதித்து பிற்காலத்திற்கு உதவவென சேமித்து வங்கியில் வைப்பில் இடப்பட்டால், பணவீக்கம் கூடியுள்ள நிலையில் வட்டி வீதங்கள் பொருத்தமற்ற வீதத்தில், குறைக்கப்பட்டுள்ள நிலையில், வைப்பிலிட்ட பணம் எதிர்பார்க்கும் அளவிற்கு உதவாது.

வங்கிகள் சேமிப்பு வைப்புக்கு 61/2 வீதம் வட்டி வழங்குகின்றன. 1000 ரூபா வைப்பிலிட்டால் ஒருவருடத்திற்கு 65 ரூபா வட்டி முதலுடன் சேர்த்து 1065 ரூபா. இன்று 1000 ரூபாவுக்கு வாங்கும் ஒருபொருளை ஒரு வருடத்தின் பின் 1065 ரூபாவுக்கு வாங்கமுடியுமா? அநேகமாக வாங்கமுடியாது. வங்கிகள் வழங்கும் வட்டி நியாயமானதா?

வங்கிகள் லொத்தர் சபைகளாக மாறி செயல்படுவதை மத்திய வங்கி கட்டுப்படுத்தக்கூடாதா? பொருளியல் நிலையையே மாற்றி அமைக்கக்கூடிய செயற்பாட்டிற்கு மத்தியவங்கி கட்டுப்பாடு இடக் கூடாதா?

வங்கிகள் லொத்தர் சபைகளாக செயற்படுவதை விடுத்து, வாடிக்கையாளருக்கு நியாயமான வட்டி வீதத்தை வழங்கும் காலம் எப்போது?

வங்கிகளின் கொள்கை வகுக்கும் அதிகாரிகளுக்கும், மத்தியவங்கி உயர் அதிகாரிகளுக்கும் இதைச் சமர்ப்பிக்கிறேன்.

*பருத்தித்துறை.*

**கா.ஏரம்பமூர்த்தி**

## பிரதேச செயலர்கள் நியமனம்: அரச அதிபருக்கு பாராட்டு

அண்மையில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக மீண்டும் பொறுப்பேற்றுக்கொண்ட யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் காலத்தின் தேவையுணர்ந்து செயற்பட்ட அபாரமுடிவை பாராட்டாமல் இருக்க முடியாது. யாழ்.மாவட்டத்தில் பல பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் பிரதேச செயலாளர் - உதவி அரசாங்க அதிபர் வெற்றிடங்கள் பல வருடங்களாக நிரப்பப்படாது பிறிதொரு பிரதேச செயலரோ அன்றேல் உதவி அரசாங்க அதிபரோ பதிற்கடமை ஆற்றிவந்தனர்.

கிழமையொன்றில் ஒரு நாளோ அன்றேல் இரு நாள்களோ பதிற் கடமையாற்றும்போது அப்பிரதேச மக்களின் பிரச்சினைகளை சரிவரக் கேட்டறிந்து செயல்வடிவம் கொடுக்கமுடியாதிருந்தது. குறிப்பாக, நாட்டில் போர்ச்சூழல் தணிந்து சமாதான ஒளிக்கீற்று தென்படும் காலகட்டத்தில் கீழ்மட்டத்தில் இருந்து அபிவிருத்திப்பணிகள் இனங்காணப்பட்டு செயற்படுத்த வேண்டியதொரு சூழ்நிலையில் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் பணியாற்றிய நிர்வாக உத்தியோகத்தர்களை பதவி உயர்வின்மூலம் பதில் பிரதேச செயலாளர்களாகவும் உதவி அரசாங்க அதிபர்களாகவும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை காலத்தின் தேவையறிந்து எடுத்த நடவடிக்கையாகும். இதனைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

*தொல்புரம்*

**தி.உதயசூரியன்**

## தமிழ்ப் புலவர் மாநாடு நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.9

தமிழ்ப் புலவர்களின் பணிகளை எதிர்வரும் காலங்களிலும் நிலைபெறச் செய்யும் நோக்கத்துடன் 'ஈழத்துத் தமிழ்ப் புலவர் மாநாடு' ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான ஆரம்பக் கட்டப் பணிகளுக்கென புலவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள் ஆகியோர் தமது பெயர், தமிழ்த் தகைமை, தொழில்முகவரி மற்றும் தமது ஆக்கங்கள் பற்றிய விவரங்களைத் தமிழவேள், 7/57ஆம் ஒழுங்கை, கொழும்பு - 6 என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாநாட்டை முன்னிட்டு சிறப்பிதழ் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது என்றும் - மாநாடு நடைபெறும் இடம் மற்றும் காலம் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தமிழ்வேள் இ.க.கந்தசுவாமி அறிவித்துள்ளார். (எ-10)

## நூல் தொகுதி அன்பளிப்பு

குருநகர், டிசெ.9

பிரான்ஸில் இயங்கிவரும் குருநகர் சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கக் கிளையின் உறுப்பினர்கள் தமிழ் எழுத்தாளர்களின் ஒரு தொகுதி நூல்களை குருநகரில் இயங்கிவரும் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இந்நூல்கள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு குருநகர் சனசமூக நிலையம், றெக்கிளமேசன் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கழகத் தலைவர் எம். நெல்சன் தெரிவித்தார். (எ-51)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு.டிசெ.9

'எயிட்ஸ்' நோய் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு எதிர்வரும் 15 ஆம், 16ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்து கல்லூரி ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்களுக்கென யுனெஸ்கோ தேசிய ஆணைக் குழுவினரின் அனுசரணையுடன் இக்கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதார பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்கள் எவரேனும் ஒருவரையாவது இக் கருத்தரங்கில் பங்கேற்க செய்யுமாறு வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.(எ-152)

## சேத விவரங்களை பதிவுசெய்ய நடவடிக்கை

காரைநகர்,டிசெ.9

காரைநகர், பலகாடு, கருங்காலி பிரதேசங்களில் யுத்த நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சேதவிவரங்களை காரைநகர் தென்மேற்கு புனரமைப்புக் குழு சேகரித்துவருகின்றது.

மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் சேதம் பற்றிய விவரங்களை வியாவில் கிராம முன்னேற்றச் சங்கத்தில் இதற்காக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பெற்று இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டுமென புனரமைப்புக் குழு கேட்டுள்ளது.(எ-73)

## பதில் உதவி பிரதேச செயலர்கள் நியமனம்

வலிகாமம் தெற்கு,டிசெ.9

யாழ்.மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகங்களில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களாகக் கடமையாற்றி வந்த நான்கு பேர் கடந்த முதலாம் திகதிமுதல் பதில் உதவிப் பிரதேச செயலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நிரந்தர பிரதேச செயலர்கள் இன்றி பதில் கடமை நிறைவேற்றப்படும் பிரதேச செயலகங்களில் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு மற்றும் பிரதேச அபிவிருத்திக்கான பணிகளில் ஈடுபடும் பொருட்டு இந்த நான்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களுக்கும் பதில் உதவி பிரதேசசெயலர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நியமனம் பெற்றோர் விவரம் வருமாறு:-

த.தேவராஜன் (வலி.தெற்கு பிரதேச செயலகம்), க.தர்மராசா (வலி. மேற்கு பிரதேசம் செயலகம், சங்கானை), சி.ரவீந்திரசர்மா (நல்லூர் பிரதேச செயலகம்), திருமதி புவனேஸ்வரி நடராசா (கரவெட்டி பிரதேச செயலகம்) ஆகியோரே இவ்வாறு நியமனம் செய்யப்பட்டுள்ளவர்கள் ஆவர். (எ-152)

## சிரமதானம்மூலம் வீதி புனரமைப்பு

கரவெட்டி,டிசெ.9

பொலிகண்டிக்கும் வல்வெட்டித் துறைக்கும் இடையில் அமைந்துள்ள சமாட்டா வீதி சிரமதானம்மூலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி வீதி போக்குவரத்துக்குப் பயன்படுத்தமுடியாத நிலையில் பலத்த சேதமடைந்து காணப்பட்டது. தற்போது சமரபாகு, பொலிகண்டியைச் சேர்ந்த இளைஞர்கள் சிரமதானம்மூலம் புனரமைத்து வருகின்றனர்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, கரவெட்டி பகுதிகளுக்கான போக்குவரத்தில் இந்த வீதி முக்கிய இடம் பெற்றுள்ளது. (எ-70)

# கல்விச்சாலைக் காட்சிகள்



நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் 12 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஆய்வுகூடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்திற் காணலாம். அருகில் அதிபர் எஸ்.சேதுராஜா மற்றும் விருந்தினர்கள் காணப்படுகின்றனர். (எ-173)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் வி.சிவசுப்பிரமணியத்தின் 6ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட டாக்டர் எஸ். சிவானந்தராசா மங்களவிளக்கேற்றுவதைப் படத்திற்காணலாம். அருகில் பிரதமவிருந்தினரான யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடாதிபதி எஸ்.இராஜதுரை, நிதியாளர் எஸ்.கனகரட்ணம், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், அதிபர் கே.சிவாஜி, அரச வங்கி மதிப்பீட்டாளர் வி.எஸ்.சிவரட்ணம் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)



வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவிலும், நிறுவுநர் நினைவுதின நிகழ்விலும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் பழைய மாணவனும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முதுநிலை விரிவுரையாளருமான கலாநிதி செ.திருநாவுக்கரசு கல்லூரிச் சமூகத்தினரால் விழா மண்டபத்துக்கு அழைத்துச்செல்லப்படுவதைப் படத்திற்காணலாம். (எ)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய நிறுவுநர் சின்னத்தம்பி கார்த்திகேசுவின் உருவப்படம் அண்மையில் நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயனால் வித்தியாலய அலுவலகத்தில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட நிறுவுநரின் பிள்ளைகளான திருமதி யோ.நாகேந்திரராசா, திருமதி ப.மயில்வாகனம் ஆகியோருடன் வித்தியாலய அதிபர் சு.சண்முககுமார் மற்றும் உப அதிபர் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-117)

## யாழ்.மாவட்டத்தில் கடமைபுரியும்

# கிராம உத்தியோகத்தர்களுக்கு விரைவில் இடர்கால கொடுப்பனவு

## உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படாதுள்ள இடர்காலக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு யாழ்.அரச அதிபரைப் பணித்துள்ளது என யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து மேற்படி சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1995 முதல் 1996ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குரிய இடர்காலக் கொடுப்பனவுகளை வழங்குமாறு பொது நிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கோரியதன பலனாக கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கிராம உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், அமைச்சர் குழுவிற்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இச் சந்திப்பில் இடையில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அலுத அலுவிஹார, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, அமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் டல்ஜித் அலுவிஹார, செயலாளர் விக்கிரம, சிரேஷ்ட செயலாளர் மற்றும் மன்னார், வவுனியா, மட்டக்களப்பு மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

சந்திப்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

* கிராம அலுவலர்களுக்கு 'மோட்டார் சைக்கிள்' வழங்கும் விடயத்தில் முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை வாபஸ் பெற்று, கடன் திட்டத்தின் மூலம் - சலுகை அடிப்படையில் சகல அலுவலர்களுக்கும் வழங்குதல்.

★ தரம் I இல் உள்ள 3 ஆயிரம் கிராமஅலுவலர்களையும் மற்றும் விசேட தரத்தில் உள்ள 106 பேரையும், முதல் கட்டமாக பதவியுயர்த்துதல்.

★ சீருடை மற்றும் காகிதாதிகள் மற்றும் சைக்கிள் கொடுப்பனவுகளை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் அதிகரித்தல்.

★ கிராம அலுவலர்களின் கடமைகளுக்கு வேறு உத்தியோகத்தர்களை இணைக்க வேண்டாம் என சகல அரசாங்க அதிபர்களுக்கும் அறிவித்தல்.

★ வடக்கு - கிழக்கிலுள்ள கிராம அலுவலர்களுக்கு கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள சொத்தழிவுகளுக்கான நஷ்டஈட்டைச் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கலந்தாலோசித்து விரைவில் வழங்க நடவடிக்கை எடுத்தல் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-5)


### வாழ்த்துக்கள்

கரவெட்டி பிரதேசசெயலராக இன்று (09.12.2002) திங்கட்கிழமை கடமையேற்கும்
திருவாளர்
**கந்தையா கனகரத்தினம்**
அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

க.நித்தியானந்தன் குடும்பம்
(கிராம உத்தியோகத்தர், திருநெல்வேலி வடக்கு)
(11570)



### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
செல்வி சுபத்திரா இராமநாதன்
அவர்களின் அன்புத் தந்தையார்
**K.S.இராமநாதன்**
அவர்கள் 5-12-2002 இல் இயற்கையெய்தியமையையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்
அதிபர், ஆசிரியர்கள். (11568)



### அறிவித்தல்

சரவணை
கொட்டாங்காடு
ஞானவைரவர் ஆலயம்
**திருவெம்பாவைப் பூசை**
12.12.2002 வியாழக்கிழமை
உபயகாரர்களை உடனடியாகச்சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அறங்காவலர்
இ.நகுலேசபிள்ளை
(11564)



### மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் கார்த்திகைத் திங்கள் 23ஆம் நாள் இன்று (09.12.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கும் 1.00 மணிக்கும் இடையில்வரும் இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்
எம்மால் ஆரம்பிக்கப்படவிருக்கும்

**நியூ லீலாவதி பல்பொருள் வாணிபம்**

எனனும் ஸ்தாபனத்தை கைதடிச் சந்தி, கைதடி கண்டி வீதியில் திறப்பு விழா நடத்த இறைவன் திருவருள் கைகூடியிருப்பதால் அவ்வமையம் எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மேற்படி ஸ்தாபனம் திரு.இ.குழந்தைவடிவேல் (J.P - தலைவர், சச்சிதானந்தா ஆச்சிரமம், கைதடி) அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.**

எம்மிடம் உரவகைகள், கிருமி நாசினி, தீப்பை, பலகை, கம்பி வகைகள், டையன் சிமெந்து, (LAVGFS LANKA GAS) எரிவாயு மற்றும் ஆனைந்தம் தயாரிப்புகள் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தங்கள் வரவை நாடும்:
*கைதடிச் சந்தி, கைதடி* (11572) திரு.தம்பிப்பிள்ளை புஷ்பராசா (உரிமையாளர்)



### மங்களகரமான காட்சியறைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் கார்த்திகைத் திங்கள் 23ஆம் நாள் இன்று (09.12.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு வரும் இந்திர முகூர்த்த சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

**கரன் வாச் அன் ரேடியோ காட்சியறை**

திறப்புவிழா வைபவத்தைச் சிறப்புற நடத்த இறையருள் கைகூடியுள்ளதால் அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
தங்கள் நல்வரவை நாடும்
ஸ்தாபனத்தினர்
(11569)


### யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம், டிசெ.9

நல்லூர் திவ்விய ஜீவன சங்கத்தில் ஆண், பெண் இருபாலாருக்குமான யோகாசன வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6.30 மணிமுதல் 7.30 மணி வரை நடைபெறும் யோகாசன வகுப்பில் பாடசாலை மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சர்வ மத யோகாசன ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (ஐ-ரி)

### சாரதி 'லைசன்ஸ்' எழுத்துப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.9

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் நடத்தப்பட்ட சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களை நாளை 10ஆம் திகதிக்கு முன்னதாக திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு செயன்முறைப் பரீட்சைக்குரிய திகதியை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா செல்லத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா செல்லத்துரை நேற்று (08.12.2002) காலமானார்.

அன்னார் பூரணத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) கணவரும் செல்வக்குமாரன் (உதவி சுங்க அத்தியட்சகர், கொழும்பு), இராஜகுமாரி, செல்வானந்தம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - முசலி பிரதேச சபை, மன்னார், வெளிக்கள உத்தியோகத்தர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), செல்வக்குணபாலன் (உதவி சட்ட வரைஞர் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் தந்தையாரும் வினாசிராஜன் (கணக்காளர் - மாலைதீவு), கேதாரணி (ஆசிரியர் - சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை) ஆகியோரின் மாமனாரும் விலக்ஷன், விருத்ஷான், செந்துஷான், பிரதாயினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 9.12.2002 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*சுதுமலை கிழக்கு,*
*மானிப்பாய்,*
(11576)
தகவல்:
செ.செல்வகுமாரன்
(மகன்)

### கந்தையா இராமையா

(புங்குடுதீவு - 10)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராமையா நேற்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னக்குட்டி தம்பதிகளின் மகனும் கனகம்மாவின் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னையா - செங்கமலத்தின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தம்பிப்பிள்ளை, கண்ணம்மா, கனகம்மா மற்றும் மீனாட்சி ஆகியோரின் சகோதரனும் பரமநாதன் (சாவகச்சேரி), விநாயகமூர்த்தி (பிரான்ஸ்), கண்ணையா (யாழ்ப்பாணம்), கோமதி (உருத்திரபுரம்), தேசிங்கராஜா (பிரான்ஸ்), கேதீஸ்வரி (U.K.), உமாபரமேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் தகப்பனாரும் சிகாமணி, மனோகரன் (பிரான்ஸ்), சதானந்தன் (பிரான்ஸ்), லிங்கேஸ்வரி, காலஞ்சென்ற யோகாம்பிகை மற்றும் கலாதேவி, யோகராணி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சண்முகம், தர்மலிங்கம் மற்றும் சிவகாமி, சிதம்பரநாதன் (பகலோன் களஞ்சியம்) ஆகியோரின் மைத்துனரும் கமலராஜா, கண்ணராஜ், ராஜ்கண்ணா, பரணீதரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*54/9, குரோசற் லேன்,*
*கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(11577)
தகவல்:
இ.கண்ணையா
(மகன்)

### சின்னத்துரை சிங்கராசா

(யோகலிங்கம்)

யாழ்ப்பாணம், மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை சிங்கராசா (யோகலிங்கம்) 04.12.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோன் மேரிப்பிள்ளையின் மருமகனும் லூர்த்தம்மாவின் (றூபி) அன்புக் கணவரும் பிறேமானந், கமல்ராஜன் (கனடா), யூலியற் ஜொய்சி (கனடா), ஜெனற் பிறின்சி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுசுடை, அலன் றொபேட் (கனடா), ஒகஸ்ரன் டன்ஸ்ரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சின்னராசா, காலஞ்சென்ற ராசா, பேபி, பிலோமினா, சந்திரலிங்கம், அருளானந்தம், யோகராசா, இந்திரா, ஞானசேகரம், தேவபாலன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.12.2002) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*28, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/25311)
தகவல்:
றூபி (மனைவி).

### திருமதி சரஸ்வதி நாராயணபிள்ளை

*(சுன்னாகம்)*

மலேஷியாவைப் பிறப்பிடமாகவும் பருத்தித்கலட்டி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நாராயணபிள்ளை அவர்கள் நேற்று 08.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணபிள்ளை(சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) அவர்களின் அன்பு மனைவியும் கிருஷ்ணன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சண்முகதேவன், காலஞ்சென்ற ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீதரன்(உரிமையாளர், சாம்பவி மில்), ஜெயந்தரன்(யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபனம், குளோபல் கொமினிக்கேஷன், மானிப்பாய்), கெங்காதரன்(பிரான்ஸ்), கிரிதரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, ஜெயந்தி(ஆசிரியை, யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), வசந்தா(பிரான்ஸ்), சகுந்தலவாணி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கீர்த்திகா, கிஷோரன், சுகன்ஜா, சஞ்ஜீவன், சங்கவி, அமிர்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(10.12.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகேஸ்வரி வித்தியாலய வீதி,*
*பருத்திக்கலட்டி, சுன்னாகம்.*
(11562)
தகவல்:
பிள்ளைகள்.

யாழ்ப்பாணம்.

# 50 லட்சம் செலவில் கல்யாண மண்டபம்

கொற்றாவத்தை செட்டித்தறை சித்திவிநாயகர் ஆலய கல்யாண மண்டபம் 50 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவருகிறது. இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அண்மையில் இதற்கான அடிக்கல் நட்டுவைத்தார்.

மேற்படி கல்யாண மண்டபம் எதிர் வரும் ஏப்ரல் மாதம் திறந்துவைக் கப்படவுள்ளது. (எ-36)


உ
சிவமயம்

**சாவகச்சேரி கல்வயல் வேதவனப்பிள்ளையார் கோயில்**

**மஹா கணபதி ஹோமப் பெருவிழா**

இன்று (09.12.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகும். பின்னர் அபிஷேகம், கணபதி ஹோமம், பூசை, நியாசார்ச்சனை, சதுஷஷ்டி உபசார பூசை என்பனவற்றைத் தொடர்ந்து உற்சவம் நடைபெறும்.

பிரதம குரு: பரம்மஶ்ரீ தாணு.வாசுதேவக் குருக்கள் (சபரீஸதாசன்)
(கோண்டாவில்)

கிரியைகள் யாவும் ஆலயப் பிரதமகுரு பிரம்மஶ்ரீ சி.மகாதேவசர்மா தலைமையில் நடைபெறும்.
அனைவரும் வருக. திருவருள் பெறுக.

(11561) - உபயகாரர்கள்.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 - 09 - 1943



மறைவு 20 - 11 - 2001

**அமரர் வைரவன் புண்ணியமூர்த்தி**

(மூர்த்தியர்)

(முன்னாள் சாரதி - இ.போ.ச.)

அன்போடு பேசி ஆதரவாய் பழகிப்
பண்போடு வாழ்ந்து மறைந்த அப்பாவே!
உங்களோடு வாழ்ந்த நாள்கள் எங்கள்
உள்ளத்தில் நீங்காது நிலைத்திருக்கும்.

*விவசாய கந்தோர் ஒழுங்கை,*
*முத்திரைச் சந்தை,*
*நல்லூர்.* (11558)

மனைவி, மக்கள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

## புலோலி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

செம்பியன்பற்று,டிசெ.9

புலோலி ஆனைவிழுந்தான் மயானத்துக்கும், புனித நகருக்கும் செல்லும் மணல்பாதையைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாதை புனரமைக்கப்படுமாயின் அப்பகுதியில் வசிக்கும் சுமார் நூற்றுக்கும் அதிகமான மக்கள் நன்மை அடைவர் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மேற்படி வீதியில் இராணுவத்தினரால் மண் அணை அமைக்கப்பட்டிருந்தது என்றும் -

படையினர் அங்கிருந்து வெளியேறிய பின்னரும் மண் அணை அகற்றப்படவில்லை என்றும் - கூறப்பட்டது. (எ-36)

## தையல் பயிற்சி விண்ணப்பம்

தென்மராட்சி,டிசெ.9

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் தையல் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சாவகச்சேரியில் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் தென்மராட்சியைச் சேர்ந்த யுவதிகள் இணைந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை அந்தந்தப் பிரிவு கிராம அலுவலரிடம் பெற்று எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் -

பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படும் பயிலுநர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் - பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ.பரராசசேகரம் தெரிவித்தார். (எ-117)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை உல்லாசப் பிரயாணத் துறை அமைச்சின் அனுசரணையுடன், இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் யாழ்ப்பாணத்தில் புதிய கற்கை நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தக் கற்கை நெறிகளுக்கு 25 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-12)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி கனகசுந்தரம்

(ஓய்வுபெற்ற லிகிதர், லிந்துலா எஸ்டேட்)

உடுவில் தெற்கு, யாமா சந்தி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் டச்சு றோட், இருபாலையை வசிப்பிடமாகவும் தற்பொழுது 17/1, ஐயனார் கேணி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கனகசுந்தரம் (ஓய்வுபெற்ற லிகிதர், லிந்துலா எஸ்டேட்) (LINDULA ESTATE) அவர்கள் 2002.12.07ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமிப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வனும் நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற வேலாயுதம் - செல்லம்மா அவர்களின் மருமகனும் காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற நாகேஸ்வரி சேனாதிராஜா, அருமைத்துரை, இரத்தினசிங்கம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வல்லிபுரம் சேனாதிராஜாவின் மைத்துனரும் முருகேந்திரன் (நோர்வே), முருகசோதி (டென்மார்க்), முருகதாஸ் (ஜேர்மனி), முருகசுந்தரி (ஆசிரியை, உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை), முருகசிம்மன் (நோர்வே), முருகானந்தன் (U.K.), முருகதர்சினி (கல்வியியற்கல்லூரி, கட்டுறு பயிலுநர், வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இரகுலேஸ்வரன் (டென்மார்க்), சுபத்திரா, விஜயலக்ஷமி (நோர்வே), சீதாஞ்சலி (ஜேர்மனி), சிவகுமாரி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் போதமாதவன், வாமணன், சஞ்சீவன், பிரசன்னாத், பிரசாத், வந்தனா, சஹானா, கீர்த்தனா, நாவலன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2002.12.09) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 17/1, ஐயனார் கேணியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்பு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/1, ஐயனார் கேணி,*
*திருகோணமலை.*
தொலைபேசி: 026-22415 (C/25307)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய காசாளர், ப.நோ.கூ.ச. சாவகச்சேரி)

அல்லாரையைப் பிறப்பிடமாகவும் கிராம்புவில், சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் தீபா (சுவிஸ்), காண்டீபன், செந்தூரன் (லண்டன்), நந்தகோபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் யாதவன் (சுவிஸ்) அவர்களின் அன்பு மாமனாரும் அர்ஜனன் (சுவிஸ்), யதுஷா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை, லட்சுமிப்பிள்ளை மற்றும் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2002.12.09) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் உரும்பிராய் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*ஞானவைரவர் கோயில் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு.* (11557)

நிரந்தர முகவரி:
*கிராம்புவில்,*
*சாவகச்சேரி வடக்கு.*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3240329 இருந்து
3257281 வரை
சீட்டிழுப்பு இல. 1356
திகதி 07.12.2002

வெற்றி எண்கள்

**01 03 32 36 40**

போனஸ் எண் **15**

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 93 | 10,000/- | 930,000/- |
| 3 | 5,306 | 500/- | 2,653,000/- |
| 2 | 87,268 | 20/- | 1,745,360/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 106,609 | 10/- | 1,066,090/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,594,450/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 2,326,800/-

தொடர் இல. 2263825க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 11ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3248291-6-79
3254855-2-79
3246400-8-61
3242593-1-15
3241462-4-02

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 429 |
| திகதி | 06.12.2002 |

டிக்கட்டின் நிறம் - சிகப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5603577-5615706

வெற்றி இலக்கங்கள் **26 30 31 48**

லக்கினம் கும்பம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 2,982,200/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 3,572,700/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 264,449 | 10 | 2,644,490 |
| 2 இலக்கங்கள் | 24,265 | 20 | 485,300 |
| 1 இல + லக்கினம் | 23,997 | 30 | 719,910 |
| 2 இல + லக்கினம் | 2,220 | 100 | 222,000 |
| 3 இலக்கங்கள் | 647 | 500 | 323,500 |
| 3 இல + லக்கினம் | 58 | 5,000 | 290,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,982,200 | - |
| மொத்தம் | 315,640 | - | 5,085,200 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 5,085,200/-

தொடர் இல. 5619188க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 10ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5607642-9-33
5606994-4-44
5606449-1-83
5611876-9-92
5612777-6-01

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# இந்து சமய விவகார...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஆலயங்களுக்கு சிலை கொள்வனவிற்காக நிதியுதவி வழங்கல்

| | | |
|---|---|---|
| 01. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஸ்டப்பன் பிரிவு, இறக்குவானை. | 02.09.2002 | 10,000 |
| 02. ஸ்ரீ பால விநாயகர் ஆலயம், சேதவத்தை வீதி, 27ஆம் தோட்டம், பெலவத்தை. | 12.09.2002 | 10,000 |
| 03. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வட்டுப்பித்தான்மடு, உயிலங்குளம். | 16.09.2002 | 10,000 |
| 04. ஸ்ரீ கதிரேசப் பிள்ளையார் ஆலயம், பெரியவெளி, மல்லிகைத்தீவு | 18.09.2002 | 10,000 |
| 05. ஸ்ரீ விநாயகர் ஆலயம், இ.தொலஸ்வல பாரதி, தமிழ் வித்தியாலயம், நித்திக்கலை | 21.11.2002 | 10,000 |
| 06. ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயம், ஸ்ரீஹபனகம,வெரலவ, இரத்தினபுரி | 21.11.2002 | 5,000 |
| 07. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், உருகல், மெதமானுவர, கண்டி. | 21.11.2002 | 10,000 |
| 08. ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், கறுக்காமுனை, நச்சிலம்பற்றை வெருகல். | 21.11.2002 | 10,000 |
| 09 ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், 37/1, பொம்பகல, நிசேவயர் வீதி, இரத்தினபுரி. | 21.11.2002 | 5,000 |
| 10. கறப்பனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கறப்பனை, செவனம்பிட்டி, பொலநறுவை. | 21.11.2002 | 10,000 |
| 11. ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், புன்னச்சோலை, மட்டக்களப்பு. | 13.11.2002 | 10,000 |
| 12. ஸ்ரீ குமாரத்தன முருகன் ஆலயம், ஜெயந்திரபுரம், மட்டக்களப்பு. | 13.11.2002 | 10,000 |
| 13. ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், டிப்போ வீதி, கிளிநொச்சி | 21.11.2002 | 10,000 |
| 14. ஆத்தியடி பிள்ளையார் ஆலயம், ஹற்றன் இல.10, பனியடிலிசன், சாமிமலை. | 21.11.2002 | 10,000 |
| 15. அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் கோயில், இல.412, போகமடித்த ஹாலிஎல. | 21.11.2002 | 10,000 |
| மொத்தம் | | 140,000 |

## ஆலயங்களில் அன்னதானம் வழங்குவதற்காக நிதியுதவி வழங்கல்

| | | |
|---|---|---|
| 01. ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம், நயினாதீவு | 11.06.2002 | 10,000 |
| 02. ஸ்ரீ கந்தசாமி ஆலயம், மாவை ஆதீனம், மாவிட்டபுரம் | 26.07.2002 | 10,000 |
| 03. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், காகிதாலை, வாழைச்சேனை | 12.11.2002 | 10,000 |
| மொத்தம் | | 30,000 |

## இந்து சமய நடவடிக்கைகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்ட - இந்து சமய நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| 01. பாரதி நற்பணி மன்றம், டேவின் ஏ பிரிவு, டெல்வின், இறக்குவானை | 10.05.2002 | 5,000 |
| 02. அன்னமலை இந்துக் கலை மன்றம், அன்னமலை, கல்முனை | 15.05.2002 | 5,000 |
| 03. கச்சியப்பர் கழகம், 723, தேக்கவத்தை, கண்டி வீதி, வவுனியா | 21.05.2002 | 5,000 |
| 04. சிவநெறிக்கழகம், மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை | 24.05.2002 | 5,000 |
| 05. இந்து கதிர்காம பாத யாத்திரிகர் சபை, 38/8,செள். அன்ரனி மாவத்தை, கொழும்பு - 13 | 03.06.2002 | 10,000 |
| 06. யாழ்.மாநகர சபை இந்து சமய விவகாரக் குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம். | 06.06.2002 | 5,000 |
| 07. இந்து மாமன்றம், வெலிஓயா, மேற்பிரிவு ஹற்றன். | 06.06.2002 | 5,000 |
| 08. ஸ்ரீ ரமண மகரிஷி அறப்பணி நிலையம், 14/4, 2ஆம் குறுக்கு பார்லி வீதி, மட்டக்களப்பு | 06.06.2002 | 5,000 |
| 09. உலக ஆன்மீக எழுச்சிப் பேரணி, 31/21, டோகன் றோட், கொழும்பு - 02. | 11.06.2002 | 15,000 |
| 10. இந்து பேரவை, 37, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். | 18.06.2002 | 15,000 |
| 11. இந்து இளைஞர் மன்றம், முனைக்காடு கொக்கட்டிச்சோலை | 26.06.2002 | 5,000 |
| 12. அகில இலங்கை திருமுறை மன்றம், 176, கச்சேரி நல்லூர், யாழ்ப்பாணம். | 26.06.2002 | 5,000 |
| 13. இந்து அபிவிருத்திச் சங்கம், 63, நல்லையா வீதி, மட்டக்களப்பு | 01.07.2002 | 10,000 |
| 14. ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவா ஆச்சிரமம், பருத்தித்துறை. | 05.07.2002 | 25,000 |
| 15. விவேகானந்த சபை, 34, விவேகானந்தா மேடு, கொழும்பு - 13. | 10.07.2002 | 10,000 |
| 16. திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை, 294/1, உட்துறைமுக வீதி, திருகோணமலை. | 22.10.2002 | 10,000 |
| 17. சைவ மகாசபை, களுவாஞ்சிக்குடி. | 24.10.2002 | 10,000 |
| மொத்தம் | | 150,000 |

## தமிழ் இந்து கலாசார மன்றங்களின் மேம்பாட்டுக்காக வழங்கப்பட்ட நிதியுதவி

| | | |
|---|---|---|
| 01. கிளிநொச்சி தமிழ் மன்றம் | 11.04.2002 | 10,000 |
| 02. கொழும்பு தமிழ்ச் சங்கம் | 11.04.2002 | 10,000 |
| 03. ஸ்ரீஸ்கந்தராஜா இசைக்குழு, வவுனியா. | 24.04.2002 | 10,000 |
| 04. திருவள்ளுவர் அபிவிருத்தி மன்றம், கட்டபுலா. | 03.06.2002 | 10,000 |
| 05. கம்பன் கழகம், யாழ்ப்பாணம். | 25.07.2002 | 18,349 |
| 06. தமிழ் கலை, கலாசார மேம்பாட்டு அமைப்பு. | 11.10.2002 | 5,000 |
| 07. கதிர்ப்புக் கலை இலக்கிய வட்டம், கல்முனை. | 11.10.2002 | 5,000 |
| 08. கொழும்பு தமிழ்ச் சங்கம். | 20.11.2002 | 5,000 |
| 09. சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, யாழ்ப்பாணம். | 20.11.2002 | 50,000 |
| மொத்தம் | | 123,349 |

## இந்து அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக நிதியுதவி வழங்கல்

| | | |
|---|---|---|
| 01. ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி அறநெறிப் பாடசாலை, திருக்கோயில். | 09.08.2002 | 9,000 |
| 02. விவேகானந்தர் அறநெறிப் பாடசாலை, றொக்கத்தன வடக்கு, ஹாலிஎல. | 21.11.2002 | 6,500 |
| 03. சேக்கிழார் அறநெறிப் பாடசாலை, புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை. | 09.08.2002 | 6,000 |
| 04. பாரதி அறநெறிப் பாடசாலை, கொல்பொட மத்திய பிரிவு, கட்டுகித்துல. | 21.11.2002 | 10,000 |
| 05. அகத்திக்குழி ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை, சாவற்காடு. | 21.11.2002 | 5,000 |
| 06. பாரதி அறநெறி பாடசாலை, பெரிய வெளி, மல்லிகைத் தீவு. | 21.11.2002 | 10,000 |
| 07. கலைமகள் அறநெறிப் பாடசாலை, கேகாலை பிரிவு கத்திரிகாமம் தோட்டம, துயகம | 21.11.2002 | 11,500 |
| 08. ஸ்ரீ ஐயனார் கோவில் அறநெறிப் பாடசாலை வலகப்பிட்டிய வீதி , நாத்தாண்டியா | 21.11.2002 | 10,000 |
| 09. ஸ்ரீமுத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை காட்டாஸ்பத்திரி, பேசாலை | 21.11.2002 | 5,000 |
| 10. கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலை, பருத்தியடைப்பு | 21.11.2002 | 10,000 |
| 11. சிவகாமி அம்பிகா சமேத சிதம்பர ஈஸ்வரர் அறநெறிப் பாடசாலை, காரைநகர். | 09.08.2002 | 10,000 |
| 12. சிவசக்தி மன்ற அறிநெறிப் பாடசாலை 76, தறவனை வீதி, டிக்கோயா | 21.11.2002 | 10,000 |
| 13. காரைதீவு இந்து கலாசார ஒன்றிய அறநெறிப் பாடசாலை | 09.08.2002 | 11,500 |
| 14. ஆறுமுக நாவலர் அறநெறிப் பாடசாலை பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம், நவகம்பர, 2 | 21.11.2002 | 10,000 |
| 15. ஸ்ரீமுத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை எருக்கலம்பிட்டி, மன்னார் | 21.11.2002 | 5,000 |
| 16. சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை ஊரெழு, சுன்னாகம். | 21.11.2002 | 10,000 |
| 17. கெல்பன் ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை, அப்புத்தளை | 21.11.2002 | 10,000 |
| 18. ஸ்ரீ பாலவிக்கினேஸ்வர ஆலய அறநெறிப் பாடசாலை, பாலையடி, காரைதீவு | 09.08.2002 | 10,000 |
| 19. திருநெறிக்கழக அறநெறிப் பாடசாலை கரடிப்போக்கு உடதபால் நிலையம், கிளிநொச்சி | 21.11.2002 | 8,625 |
| 20. ஸ்ரீரங்கநாதப் பெருமாள் அறநெறிப் பாடசாலை வட்டக்கச்சி, கிளிநொச்சி | 21.11.2002 | 10,000 |
| 21. சைவ இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை | 21.11.2002 | 5,000 |
| 22. ஸ்ரீமுருகன் அறிநெறிப் பாடசாலை வட்டவான், உடப்பு | 21.11.2002 | 10,000 |
| 23. ஸ்ரீநாககாளியம்மாள் அறநெறிப் பாடசாலை வரக்கள்ளி, நுரைச்சோலை | 21.11.2002 | 10,000 |
| 24. நாவலர் அறநெறிப் பாடசாலை பாண்டிருப்பு, கல்முனை | 09.08.2002 | 10,000 |
| 25. கோமாரி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை | 09.08.2002 | 10,000 |
| 26. குாண்டியடி அறிநெறிப் பாடசாலை | 09.08.2002 | 10,000 |
| 27. இந்து நற்பணி மன்ற அறநெறிப் பாடசாலை டெல்வின் பி பிரிவு இறக்குவானை | 21.11.2002 | 10,000 |
| 28) ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஸ்ரீஐயப்பசுவாமி அறநெறிப் பாடசாலை | 09.08.2002 | 5,000 |
| மொத்தம் | | 248,125 |

## இந்து அநாதைச் சிறுவர் இல்லங்கள்

| | | |
|---|---|---|
| 01) சுவாமி நடராஜானந்தாஜீ சிறுவர் புனர்வாழ்வு மன்றக் கல்லூரி, பிரதான வீதி, சித்தாண்டி | 13.11.2002 | 20,000 |
| 02) கதிரொளி சிறுவர் இல்லம் கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு | 13.11.2002 | 20,000 |
| 03) துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை | 20.11.2002 | 25,000 |
| 04) விபுலானந்தர் மாணவர் இல்லம், குருகுல வீதி, ஆலையடிவேம்படி, அக்கரைப்பற்று | 13.11.2002 | 25,000 |
| 05) திருஞானசம்பந்தர் குருகுலம் பிரதான வீதி, களுதாவளை -1 | 13.11.2002 | 25,000 |
| 06) திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனம்.தம்பிலுவில் - 2 | 13.11.2002 | 20,000 |
| 07) ஸ்ரீசண்முக பெண்பிள்ளைகள் இல்லம் 54, வித்தியாலய வீதி, திருகோணமலை | 20.11.2002 | 20,000 |
| 08) ஜீவஜோதி இல்லம், 52/1,ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு. | 13.11.2002 | 25,000 |
| 09) விபுலானந்தர் சிறுவர் இல்லம் திருப்பழுகாமம், மட்டக்களப்பு. | 13.11.2002 | 25,000 |
| 10) யோகசுவாமி சைவ மகளிர் இல்லம் பிரதான வீதி சித்தாண்டி, மட்டக்களப்பு | 30.10.2002 | 17,200 |
| 11) அன்பு இல்லம், 16ஏ, - மத்திய வீதி, திருகோணமலை | 20.11.2002 | 20,000 |
| 12) சிவானந்த தபோவனம் உப்புவெளி, திருகோணமலை | 09.10.2002 | 15,000 |
| 13) சைவ விருத்தியா விருத்திச் சங்கம் திருநெல்வெலி | 09.10.2002 | 15,000 |
| 14) செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் யாழ்ப்பாணம் | 09.10.2002 | 19,765 |
| மொத்தம் | | 291,965 |

## புனரமைப்புப் பணிகளுக்காக நிதி உதவி வழங்கப்பட்ட ஆலயங்கள்

| | | |
|---|---|---|
| 01. அருள்மிகு கந்தசுவாமி கோவில், கிளிநொச்சி | 25.05.2002 | 302,000 |
| 02. தொண்டமனாறு செல்வச்சந்நிதி, யாழ்ப்பாணம் | 26.07.2002 | 100,000 |
| 03. திருக்கேதீவரம் மன்னார். | 31.07.2002 | 100,000 |
| 04. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் நவகம்புர, கிராண்பாஸ் | 21.08.2002 | 200,000 |
| 05. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் ஆவரம்பிட்டி, அராலி | 10.10.2002 | 15,000 |
| 06. சித்திரவேலாயுதசுவாமி ஆலயம் சித்தாண்டி | 14.11.2002 | 100,000 |
| 07. ஸ்ரீ முத்தமாரியம்மன் ஆலயம், கறுவாக்கேணி | 14.11.2002 | 50,000 |
| 08. ஸ்ரீ சித்திரவேலாயுத அம்மன் ஆலயமும் கண்ணகியம்மன் ஆலயமும், முனைக்காடு | 14.11.2002 | 50,000 |
| 09. தான்றோன்றீஸ்வரர் ஆலயம் கொக்கட்டிச்சோலை | 14.11.2002 | 200,000 |
| 10. ஆலகண்டிப் பிள்ளையாரும், சிவாலயமும் கறுவாக்கேணி வடக்கு , வாழைச்சேனை | 14.11.2002 | 50,000 |
| 11. பிள்ளையார் ஆலயம், களுதாவளை | 14.11.2002 | 100,000 |
| 12. வீரபத்திரர் ஆலயம், முனைக்காடு | 14.11.2002 | 50,000 |
| 13. ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், கோட்டைமுனை | 14.11.2002 | 50,000 |
| 14. ஸ்ரீ முருகன் ஆலயம், ஆலங்குளம் | 14.11.2002 | 50,000 |
| 15. ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், அமிர்தகழி புனைச்சோலை | 14.11.2002 | 50,000 |
| 16. வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பாலமீன்மடு | 14.11.2002 | 50,000 |
| 17. ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், கிராண்குளம் | 14.11.2002 | 50,000 |
| 18. ஸ்ரீ சிவசுப்பிரணிய ஆலயம், பெரியகல்லாறு | 14.11.2002 | 50,000 |
| 19. ஸ்ரீ கிருஷ்ண கோவில், குருக்கள் மடம் | 14.11.2002 | 50,000 |
| 20. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், கல்லடி | 14.11.2002 | 50,000 |
| 21. ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயம், புளியந்தீவு | 14.11.2002 | 50,000 |
| 22. ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலயம், மட்டக்களப்பு | 14.11.2002 | 100,000 |
| 23. உகந்தை முருகன் ஆலயம், அம்பாறை | 14.11.2002 | 300,000 |
| 24. ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், அன்னமலை | 14.11.2002 | 100,000 |
| 25. சித்திரவேலாயுதசுவாமி கோவில், திருக்கோவில் | 14.11.2002 | 150,000 |
| 26. திருமுருகண்டிப் பிள்ளையார் ஆலயம், கிளிநொச்சி | 31.05.2002 | 300,000 |
| மொத்தம் | | 2,717,000 |

## ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக 2001ஆம் ஆண்டின் தொடர்ச்சியாக 2002ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 2ஆம் கட்டக் கொடுப்பனவு

| | | |
|---|---|---|
| 01. ஸ்ரீ மாவேற்குடா பிள்ளையார் ஆலயம் பெரியபோரதீவு | 30.04.2002 | 25,000 |
| 02. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், விளாவெட்டுவான், நாவற்காடு | 30.04.2002 | 10,000 |
| 03. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், விளாவெட்டுவான், நவாற்காடு | 30.04.2002 | 25,000 |
| 04. ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், திருப்பெருந்துறை | 30.04.2002 | 10,000 |
| 05. ஸ்ரீ முருகன் ஆலயம், களுவண்கேணி | 30.04.2002 | 25,000 |
| 06. புதுமை விநாயகர் ஆலயம், பாரதிபுரம், கிளிவெட்டி | 30.04.2002 | 10,000 |
| 07. சிவன் ஆலயம், பாரதிபுரம், கிளிவெட்டி | 30.04.2002 | 10,000 |
| 08. ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், மணற்சேனை | 30.04.2002 | 25,000 |
| 09. ஸ்ரீ கதிரேசப்பிள்ளையார் ஆலயம், பெரியவெளி தோப்பூர் | 30.04.2002 | 10,000 |
| 10. அரசடி ஸ்ரீ முருகன் ஆலயம், பெரிய நீலாவணை, கல்முனை | 30.04.2002 | 10,000 |
| 11. ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், அம்பாறை | 30.04.2002 | 60,000 |
| 12. ஸ்ரீ காரையடிப் பிள்ளையார் ஆலயம், காரைதீவு | 30.04.2002 | 10,000 |
| 13. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், சேனைக்குடியிருப்பு, கல்முனை | 30.04.2002 | 10,000 |
| 14. ஸ்ரீமுருகன் ஆலயம், கோமாரி, பொத்துவில் | 30.04.2002 | 45,000 |
| 15. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், அவிசாவளை | 30.04.2002 | 25,000 |
| 16. ஆகாயக்குளம் விநாயகர் ஆலயம், அராலி | 30.04.2002 | 25,000 |
| 17. ஞானி புதூர் சித்திவிநாயகர் ஆலயம், வவுனியா | 30.04.2002 | 25,000 |
| 18. ஸ்ரீ மதுமலர்கா வீரபத்திரசுவாமி ஆலயம், ஏறாவூர் | 30.04.2002 | 25,000 |
| மொத்தம் | | 385,000 |

## புனரமைப்புப் பணிகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்ட இந்து நிறுவனங்கள் (மடமும், ஆச்சிரமும்)

| | | |
|---|---|---|
| 01. மகாதேவ ஆச்சிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி | 10.10.2002 | 115,000 |
| 02. சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம், நீராவியடி, யாழ்ப்பாணம் | 17.10.2002 | 200,000 |
| 03. கன்னியா வெந்நீர் ஊற்றுக் கிணறுகளும் அதன் சுற்றாடலைப் பராமரித்தலும் | 17.10.2002 | 100,000 |
| 04. ஸ்ரீ காயத்ரி காமகோடி பீடம் | 23.10.2002 | 60,000 |
| 05. கீரிமலைக்கேணியும் அதன் சுற்றாடலும் | 29.07.2002 | 340,000 |
| 06. நாவலர் மணிமண்டபம், நல்லூர் | | 975,538 |
| 07. கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதி திருத்தம் | 03.10.2002 | 186,519 |
| மொத்தம் | | 1,977,057 |

## பொழிப்பு

| விவரம் | தொகை |
|---|---|
| 01. இந்து சமய மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியுதவி | 550,129.75 |
| 02. பிற இந்து கலாசார நடவடிக்கைகளுக்கான நிதியுதவி | 132, 137.00 |
| 03. குருகுலக் கல்வி அபிவிருத்தி | 126,645.00 |
| 04. இந்து சமய கலாசார ஆராய்ச்சி | 661,137.00 |
| 05. இந்து கலை, கலாசார மேம்பாடு | 972,032.00 |
| 06. இந்து அறநெறிப்பாடசாலை அபிவிருத்தி | 2,336,913.00 |
| 07. பிற அரச நிறுவனங்களுடனான செயற்பாடுகள் | 23,900.00 |
| 08. நிதி உதவிகள் வழங்கல் | 310,500.00 |
| 09. ஆலயங்களுக்கான உபகரணங்கள் வழங்கல் | 1,532,025.00 |
| 10. ஆலயங்களின் நித்திய பூசை வழிபாட்டிற்கான நிதியுதவி | 220,000.00 |
| 11. ஆலயங்களின் சிலை கொள்வனவிற்கான நிதியுதவி | 140,000.00 |
| 12. ஆலயங்களின் அன்னதானம் வழங்குவதற்கான நிதியுதவி | 30,000.00 |
| 13. இந்து சமய நடவடிக்கைகளுக்காக இந்து சமய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | 150,000.00 |
| 14. தமிழ் இந்து கலாசார மேம்பாட்டுக்காக வழங்கப்பட்ட நிதியுதவி | 123,349.00 |
| 15. இந்து அறநெறிப்பாடசாலையின் புனரமைப்புக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | 248,125.00 |
| 16. இந்து அநாதைச் சிறுவர் இல்லங்களின் வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட நிதியுதவி | 291,965.00 |
| 17. புனரமைப்புப் பணிகளுக்காக ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | 2,717,000.00 |
| 18. ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக 2001ஆம் ஆண்டின் தொடர்ச்சியான 2ஆம் கட்டக் கொடுப்பனவு | 385,000.00 |
| 19. புனரமைப்புப் பணிகளுக்காக இந்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | 1,977,057.00 |
| மொத்தம் | 12,927,914.75 |

(C/25306)

மாநகராட்சி மற்றும்
யாழ்ப்பாணம்.



# லண்டனிலிருந்து உதைபந்தாட்ட அணி

## யாழ்., வன்னிக்கு நல்லெண்ண விஜயம்

யாழ்ப்பாணம், டிசெ.9

லண்டன் நகரில் இருந்து உதைபந்தாட்ட அணி ஒன்று யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு வருகின்றது.

இம்மாத நடுப்பகுதியில் வருகை தரும் இக்குழுவினர் 5 சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றவுள்ளனர்.

யாழ்பல்கலைக்கழக அணி, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தெரிவு அணி, இளவாலை யங்ஹென்றீஸ் அணி, கிளிநொச்சிமாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் அணி மற்றும் யாழ்பாண உதைபந்தாட்ட லீக்கின் தெரிவு அணி என்பவற்றுடன் லண்டன் அணியினர் விளையாடவுள்ளனர்.

லண்டனில் இருந்து வருகை தரும உதைபந்தாட்ட அணியில் பல வருடங்களுக்கு முன்னர் வடக்கிலிருந்து புலம் பெயர்ந்து சென்று லண்டன் நகரில் வசிக்கும் தமிழ் விளையாட்டு வீரர்கள் இடம்பெறுகின்றனர். (ஐ-5-86)

# கோப்பாய் வயல்களிலும் கட்டாக்காலிகள் தொல்லை

கோப்பாய்,டிசெ.9

கோப்பாய் தரவையை அண்டிய விவசாய நிலப்பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளினால் நெற் பயிர்கள் அழிக்கப்பட்டுவருவதாக முறைபாடு தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - நெற் பயிர்களை நாசம் செய்த கால்நடைகள் சில மீட்கப் பிடிக்கப்பட்டுள்ளன என்றும்-

எனினும் இதுவரை எவரும் அவற்றுக்கு உரிமை கோரவில்லை என்றும்-

கோப்பாய் வடமத்தி விவசாய சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (எ-72)

# நுளம்பால் 'எய்ட்ஸ்' பரவுவதாக 35 வீத மாணவர்கள் நம்பிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.9

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களிடையே நடத்திய கருத்துக் கணிப்புகள், எய்ட்ஸ் தொடர்பான அவர்களது விழிப்புணர்வின்மையையும் அக்கறையின்மையையும் வெளிக்காட்டியிருக்கிறது.

கொழும்பிலுள்ள எட்டுப் பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த 705 மாணவர்களிடையே சுயநிர்வாகம் தொடர்பான 14 வினாக்கள் அடங்கிய கொத்து வழங்கப்பட்டது. விஞ்ஞானப் பிரிவு மாணவர்களை காட்டிலும் கணித, வர்த்தக மற்றும் கலைப்பிரிவு மாணவர்கள் குறைந்தளவு அறிவையே வெளிக்காட்டினர். கலப்பு பாடசாலை மாணவர்களும் அவர்கள் பலதரப்பட்ட அறிவு நிலை கொண்ட சூழல்களிலிருந்து வந்தவர்களாயினும் முன்னேற்றகரமானவர்களாக இருக்கவில்லை.

ஏழு வீதமான மாணவர்கள் பாதுகாப்பற்ற உடலுறவின் மூலமாகவே எய்ட்ஸ் பரவுகிறது என்பதை அறிந்திருக்கவில்லை. 21 வீதமானவர்கள் பாதுகாப்பற்ற ஓரினச் சேர்க்கையால் எந்தப் பிரச்சினையும் இல்லை எனத்தெரிவித்துள்ளனர். கட்டித்தழுவுதலாலும் சுவாச சிறுதுளிகளாலும் எய்ட்ஸ் பரவலாம் என முறையே 11,16 வீதமானோர் தெரிவித்துள்ளனர்.

35 சதவீதமான மாணவர்கள் எய்ட்ஸ் நுளம்பு மூலம் கடத்தப்படுவதாக கூறியுள்ளனர்.

'கொண்டோம்' பாவிப்பது பாதுகாப்பானது என்பதனை 22சதவீதமனோர் அறிந்திருக்கவில்லை. வாய் மூலம் உள்ளெடுக்கும் கருத்தடை மாத்திரைகளால் எய்ட்ஸையும் குணப்படுத்த முடியும் என 6 வீதமான மாணவர்கள கூறியுள்ளனர்.

இதேவேளை - ஒருவருக்கு ஒருத்தி என்பதன் மூலம் எய்ட்ஸை தடுக்க முடியும் என்று கூறுவதை 15 வீதமான மாணவர்கள் நிராகரித்துள்ளனர்.

உலக சுகாதார அமைப்பின் அண்மைய புள்ளி விவரங்களின்படி இலங்கையில் 4ஆயிரத்து 800 பேர் எச்.ஐ.வி 'பொஸிடிவ்' தொற்றுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. 2ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் இதனால் அநாதைகளாக்கப்பட்டுள்ளன என்று அது கூறுகிறது. (ஐ-9)

# திருமலையில் 1,000 ரூபா கள்ள நோட்டுக்கள்! ஒன்பது பேர் பொலிஸாரினால் கைது!!

திருகோணமலை,டிசெ9

ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்கள் வைத்திருந்த 9 பேர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 18 கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

ஜமாலியா அகதிமுகாமருகே நேற்றுமுன்தினம் நடமாடிய மூவரை விசாரணை செய்த பொழுது கள்ள நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும், ஒருவரிடம் 9 நோட்டுக்களும் மற்றொருவரிடம் 6 நோட்டுக்களும் மூன்றாமவரிடம் 3 நோட்டுக்களும் இருந்தன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்திருக்கின்றனர்.

இம்மூவரையும் விசாரணை செய்ததை அடுத்து ஏனைய ஆறு சந்தேக நபர்களையும் கைது செய்ததாகவும் - இவர்களில் 6 பேர் முஸ்லிம்கள் எனவும் - மூவர் தமிழர்கள் எனவும் - பொலிஸார் கூறுகின்றனர். கைது செய்யப்பட்டவர்களிடம் மேலும் பல கள்ள நோட்டுக்கள் இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து குற்றத்தடுப்பு பொலிஸ் குழு ஒன்று விசாரணைக்காக திருகோணமலை சென்றிருக்கிறது. திருகோணமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். (ஐ)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
தரம் 5
புலமைப்பரிசில்
வகுப்பு மாணவர்களுக்கான
விசேட
சிங்கள வகுப்பு
BY:- லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:-
இன்று 9.12.2002 Mon:2.30
(11559)

LOGIC A/L 2003
சமூக விஞ்ஞானமும் புள்ளிவிபரமும்
ஆரம்பம்: செவ். 7a.m.
புதன் 7a.m.
களம்
மதுபாரத் நிறுவனம்
இந்து மகளிர் ஒழுங்கை
(11563)

நாளை முதல் — சிகச் சொற்ப பிரதிகளே
எழுதுநர்/கிராம சேவகர்
போட்டிப் பரீட்சை வழிகாட்டி
நூல் முற்றிலும் எதிர்பார்க்கை
வினாக்களுடன்
உளச்சார்பு வினாக்கள்
மற்றும் பொதுஅறிவு விடயங்கள் விரிவாக.
ஆக்கியோன்
திரு.P. உமாசங்கர்
B.Com(Spl), Spl.Trd.Com, C.B.F (LON)
சகல புத்தகசாலைகளிலும்
(11553)

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான கைந்நூல்
தொகுப்பு:- த.தவசேகர்
※ இம்முறை நடைபெறும் பரீட்சையின் முக்கிய மாற்றங்களை உள்ளடக்கியது.
※ யாழ். பிரதான புத்தக நிலையங்களிலும் ஆசிரியரின் வகுப்புகள் நடைபெறும் நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
(11566)

# பாலர் பாடசாலை இயங்கும்

தென்மராட்சி,டிசெ.9

சாவகச்சேரி பாரதி பாலர் பாடசாலை மீண்டும் ஜனவரி முதல் இயங்கவுள்ளது.

பாலர் பாடசாலையில் இணைப்பதற்கான பதிவுகள் நாளை மறுதினம் தொடக்கம் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித் தியாலத்திற்கு அருகில் உள்ள 'மடுப்பதி' என்னும் வீட்டில் மேற்கொள்ளப்படுமென பாலர் பாடசாலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-117)

# குளங்களின் விவரம் சேகரிப்பு

தென்மராட்சி,டிசெ.9

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய எல்லைக்குட்பட்ட விவசாய சம்மேளன பிரிவுகளில் உள்ள உவர் குளங்கள் சம்பந்தமான விவரங்களை உடனடியாக மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் சமர்ப் பிக்குமாறு பெரும்பாக அலுவலர் எஸ்.சத்தியேந்திரா அறிவித்துள்ளார். (ஐ-117)

# கோட்டக்கல்வி அலுவலகம் மருதங்கேணியில்

தென்மராட்சி,டிசெ.9

வடமராட்சி கல்வி வலயக் கட்டடத்தில் இயங்கிவந்த மருதங்கேணி கோட்டக்கல்வி அலுவலகம் மீண்டும் மருதங்கேணியில் கடந்த முதலாம் திகதி இயங்கத் தொடங்கியுள்ளது.

மருதங்கேணி கோட்டக்கல்வி அலுவலராக புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் பா.இரகுநாதன் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.(ஐ-117)

# அமைச்சருக்கு எதிராக வழக்கு

கூட்டுறவுத்துறை அமைச்சர் அப்துல் காதர் மற்றும் கண்டி மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல்ல ஆகியோருக்கு எதிராக கொலைக் குற்றம் சுமத்தி வழக்கு ஒன்று கண்டி உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது.

கடந்த தேர்தல் காலத்தில் நாவலப்பிட்டியில் சிறில் வீரசூரிய என்பவரை படுகொலை செய்ததாகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# அனில்முனசிங்க காலமானார்

முதுபெரும் அரசியல்வாதி அனில் முனசிங்க நேற்று தனது 75ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார்.

1927ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி பிறந்த இவர், கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்றார்.

கொழும்பு, லண்டன் பல்கலைக்கழகங்களில் சட்டத்துறையில் பட்டப்படிப்பை பூர்த்திசெய்தார். அநாகரிக தர்மபாலாவின் பேரனான இவர், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் பிரதி சபாநாயகராகப் பதவி வகித்தார்.

1956ஆம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பாக அகலவத்தை தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

1964ஆம் ஆண்டு போக்குவரத்து அமைச்சராகப் பதவிவகித்தார். 1970ஆம் ஆண்டு முதல் 1975ஆம் ஆண்டு வரை இலங்கை போக்குவரத்து சபையின் தலைவராகப் பணிபுரிந்தார்.(ஐ)

லக்ஷ்மி இணுவில்
தாக்குதலும் கராட்டியும் நிறைந்த
UNIVERSAL SOLDIER (ரீலீஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பி.நே.)
14.12.2002 முதல்
உங்களை நினைத்து
(11571)

நிறைஞ்சனாஸ் சங்கானை
06.12.2002 முதல்
விஜய், சூர்யா, கௌசல்யா நடித்த
"நேருக்கு நேர்"
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (பி.நே.)
(7257)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், ரபு, சாக்ஷி, கவுண்டமணி நடித்த
தாயின் மணிக்கொடி (ரீலீஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேடகாட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (பி.நே.)
11 ஆம் திகதி முதல் செந்தூரா (தேசவி)(11534)

ராஜா யாழ்ப்பாணம்.
சில தினங்கள் மட்டும்
அஜித் (இருவேடங்களில்), கிரண், மீனா நடித்த

வில்லன் (ரீலீஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)

# யாழ். கோட்டைப் பிரதேசத்தை பின்தங்கிய வட்டாரமாக பிரகடனப்படுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்.மாநகர சபைப் பிரிவில் டச்சுக் கோட்டையை உள்ளடக்கிய முதலாம் வட்டாரப் பிரதேசத்தை போரினால் பாதிக்கப்பட்டு பின் தங்கிய வட்டாரமாகப் பிரகடனப்படுத்துமாறு மாநகர சபையின் கூட்டணி உறுப்பினர் செ.விஜயரட்ணம் அரச அதிபரைக் கோரியுள்ளார்.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள், போர் நடவடிக்கைகளினால் மேற்படி வட்டார மக்களின் குடியிருப்புகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டன. சொத்துக்கள் அனைத்தையும் இழந்தும், உறவுகளைப் பிரிந்தும் இன்றுவரை தொடர்ந்தும் இடம்பெயர்ந்தவர்களாகவே அவர்கள் வாழ்கின்றனர்.

இந்த வட்டார மக்களின் குடியிருப்புகளின் அழிவுகள், சொத்துக்களின் இழப்பு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்டபின் தங்கிய வட்டாரமாகப் பிரகடனப்படுத்த வேண்டும்.

புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி இவ்வட்டார மக்களுக்கான மலசல கூடம் அமைத்தல், குடிதண்ணீர் வசதி, வீடமைப்பு, வீதிகள் புனர்நிர்மாணம், மின்சார இணைப்பு ஆகிய திட்டங்களை சர்வதேச சமூகம் வழங்கும் உதவிகள மூலம் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழு, அரசசார்பற்ற நிறுவனங்கள் அல்லது புனர்வாழ்வு அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் 512 ஆவது படைப்பிரிவு இராணுவ கட்டளை அதிகாரியினால் இவ் வட்டாரத்தில் மீள குடியமர அனுமதி வழங்கப்பட்ட போதிலும் அடிப்படை வசதிகள் ஏதும் அங்கு இல்லாததால் மக்கள் அங்கு குடியமர முடியாது ஏழ்மையில் வாழ்கின்றனர்.

கூடிய விரைவில் இவ்வட்டாரத்தில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இவ் வட்டாரத்திலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டுவரும் உலர் உணவு விநியோகத்தை எக் காரணத்தைக் காட்டியும் நிறுத்திவிடக்கூடாது.

இவ்வாறு அவர் அரச அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். (ஐ-ரி)

# மின்குமிழ்களைப் பொருத்தி வீதிக்கு ஒளி கொடுத்த மக்கள்

கோப்பாய்,டிசெ.9

கோப்பாய் - கைதடி வீதியின் ஒரு பகுதிக்கு பொதுமக்கள் தாமே முன்வந்து மின்குமிழ்களைப் பொருத்தி இரவு வேளையில் மின் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

இராசவீதிச் சந்தியிலிருந்து கோப்பாய் ஆஸ்பத்திரி வரையிலான பகுதிக்கே மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதிக்கு மின்குமிழ்களைப பொருத்தித் தருமாறு நீண்ட காலமாக பிரதேச சபை மற்றும் மின்சாரசபை அதிகாரிகளிடம் தாம் கோரிக்கை விடுத்ததாகவும் -

அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் பலனற்றுப்போய்விட்டன என்றும்-

பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-72)

# பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

வலிகாமம் தெற்கு,டிசெ.9

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் இவ்வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீசையில் சித்தியடைந்த 65 மாணவர்கள் மானிப்பாய வட்ட லயன்ஸ் கழகத்தினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இம்மாணவர்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரால் வருடந்தோறும் மேற்கொள்ளப்படும் கல்வி சார் சேவைத்திட்டத்தின் கீழ் இந்நிகழ்வு நடைபெற்றது.

மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் லயன் எஸ்.சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான பரிசுப்பொருள்களையும் சான்றிதழ்களையும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா வழங்கினார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் 12 மாணவர்களும் மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையில் 8 மாணவர்களும் மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் 7 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

அத்துடன், மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலய மாணவி சிறீதேவி வேலும்மயிலும் 166 புள்ளிகளைப் பெற்று இக்கோட்டத்தின் முதல் மாணவியாகவும் யாழ்.மாவட்டத்தில் மூன்றாவது மாணவராகவும் சித்தியடைந்துள்ளார்.

மானிப்பாய் சோதிவேம்படி மாணவன் மகேந்திரன் கஜிதாப் (159 புள்ளி) இரண்டாம் இடத்தையும் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவிகள் அபிராமி அமிர்தலிங்கம், சஜிதா கிருஷ்ணபிள்ளை (156 புள்ளி) மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மேலும் இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றில் தலா ஐந்து பேர்களும்-

சண்டிலிப்பாய் இந்து, நவாலி சென். பீற்றேர்ஸ் ஆகியவற்றில் தலா நான்கு பேர்களும் -

மானிப்பாய் சென்ற்.ஆன்ஸ், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம ஆகியவற்றில் தலா மூன்று பேர்களும்-

பண்டத்தரிப்பு மகளிர், நவாலி மகாவித்தியாலம், மாதகல் சென். ஜோசேப், மாதகல் விக்னேஸ்வரா, சில்லாலை றோ.க. என்பவற்றில் தலா இரண்டு பேர்களும் -

ஆனைக்கோட்டை றோ.க., நவாலி அட்டகிரி, இளவாலை றோ.க., ஆனைக்கோட்டை அ.மி.த.க. ஆகியவற்றில் தலா ஒரு மாணவனும் இப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். (ஐ-152)

# சமாதானத்துக்கு நாம் ஆதரவு; நாட்டுப் பிளவுக்கே எதிர்ப்பு

## பதுளையில் எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ

பொதுஜன ஐக்கிய முன்னணி ஒருபோதும் சமாதான முயற்சிகளை எதிர்க்கமாட்டாது என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தராஜபக்ஷ தெரிவித்தார். பதுளையில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாங்கள் சமாதானப் பேச்சுக்களை எதிர்க்கவில்லை. நாடு பிளவுபடுவதையே எதிர்க்கிறோம். இதனை நாம முன்கூட்டியே தெரிவித்துள்ளோம். சமாதான முயற்சியின்போது ஏற்படும் தவறுகளை சுட்டிக்காட்டுவதற்கு எமக்கு உரிமையுண்டு. தவறுகளை சுட்டிக்காட்டுவது சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கையல்ல. இப்படி அவர் கூறினார். (ஐ)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரி மற்றும் சென்பற்றீசியன் தொழில நுட்ப நிலையம் என்பவற்றில் தொழில் பயிற்சிகளை முடித்து வெளியேறியோருக்கான கருத்தரங்கு எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொக்குவிலில உள்ள யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறும். (ஐ-4)

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு புதிய செயலர் தேவைப்படின் அது குறித்து ஆலோசனை

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

புத்தளம்,டிசெ.9

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குப் புதிய பொதுச் செயலாளர் ஒருவர் தேவை என்ற உணர்வு ஏற்பட்டால், அது குறித்து பூரண ஆலோசனைகள மேற்கொள்ளப்படும்.

அமைச்சரும் ஸ்ரீல.மு.காங்கிரஸ் தேசிய தலைவருமான ரவூப் ஹக்கீம நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் கருததுத் தெரிவிக்கும்போது இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸின் இல்லத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது, அவர் மேலும் தெரிவிதததாவது:-

அரசியல் அதியுயர்பீடம் கூடும் போது, தற்போது எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் அதாவுல்லா குழுவினர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் குறித்தும் விரிவாக பரிசீலனைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

இங்கு நடந்த சதித் திட்டங்களை அதிரடி நடவடிக்கைகள் மூலம் ஒஸ்லோவுக்கு தெரிவித்து உதவிய தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸுக்கு அதிரடி நடவடிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்க வேண்டும் என ஆதரவாளர்கள் ஏகோபித்த குரலில் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், உறுப்பினர்களிடையே சில ஒப்பந்தங்கள் உள்ளன. எனினும நிலைமை கட்டுமீறிச் சென்றால் அமைப்பாளர் பாயிஸுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி குறித்து ஆலோசனை செய்யப்படும் - என்றார்.

மேலும் பிரிந்து சென்றுள்ள 11 பேரையும் கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் ஆதரவாளர்கள் முன்வைததனர். (ஐ)

# தமிழ் மண்ணில் நிற்பதுபோன்ற உணர்வை தந்தது நியூசிலாந்தில் நடந்த நிகழ்வு

நியூசிலாந்தில் ஒக்லண்ட் நோர்மல இன்டமீடியேட் பாடசாலையில் கடந்த 30 ஆம் திகதி நடந்த மாவீரர்தின நிகழ்வு, அதில் கலந்து கொண்ட அனைவருக்கும் தமிழ மண்ணில் நிற்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட மாவீரர் மண்டபத் தில் அரங்கத்தின் அருகில் வலது புறத்தில் தமிழீழத் தேசியத் தலை வரின் மிகப்பெரிய உருவப்படமும் இடது புறத்தில் கேணல் கிட்டு, கேணல் ராஜு, கேணல் சங்கர், லெப்.கேணல் திலீபன், முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் மண்ணுக்கு முதல் வித்தான மாவீரர்கள் இரண்டாவது லெப்.மாலதி, லெப்.சங்கர் ஆகியோரின் படங்களும் அரங்கத்தைப் பார்த்தவர்களை மெய்சிலிர்க்க வைத்தன.

அரங்கம் நிறைந்த கூட்டத்தின் மத்தியில் மாலை 6.30 மணிக்கு தமிழீழத் தேசியக்கொடியேற்றலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. தமிழீழத தேசியக்கொடியை உருத்திராபதி ஏற்றினார்.இவர் கப்டன் வாசு, மேஜர் ஜேம்ஸ், மேஜர் சுந்தரி ஆகிய மூன்று மாவீரர்களை ஈன்றெடுத்த தந்தையாவார்.

அடுத்து பசுமைக்கட்சியின் (Green Party) நாடாளுமன்ற உறுப்பினர் கீத் லொக்(Kith locke) நியூசிலாந்து தேசியக்கொடியை ஏற்றினார்.

இவற்றைத் தொடர்ந்து மறைந்த மாவீரர்களுக்கு அமைதி வணக்கம் செலுத்தி அதன் பின்னர் ஈகச்சுடர் ஏற்றல் நடைபெற்றது. மண்டபத்தின் நடைபாதையில் வரிசையாக மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை மெழுகுவர்த்திகளாலும் பூக்களாலும் சுற்றி வளைக்கப்பட்டிருந்தன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் சட்டத்தரணிகள் உட்பட கூடியிருந்த அனைவரும் மெழுகுவர்த்தி ஏற்றியவண்ணம் மலர்தூவி மறைந்த மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தினர்.

அரங்குநிகழ்வில் முதல் அம்சமாக மாறியீட் பீட்டர் அம்மையாரும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிச்ட் வோர்த் ஆகியோர் உணர்வு பூர்வமாக உரையாற்றினார்கள். அதன் பின்னர் நிகழ்வில் சிறப்புரைகள், நாடகங்கள் நடனங்கள் ஈழத்துப் பாடல்கள் யாவும் எமது மண்ணின் பெருமையையும் போராட்டத்தையும் மாவீரர்களின் தியாகத்தையும் தத்து ரூபமாக சித்திரித்து காட்டின.இறுதிநிகழ்வான கொடி இறக்கத்துடன் மாவீரர்தின நிகழ்வுகள் இனிதே நிறைவெய்தின. (ஐ)

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு உலக வங்கி 297 கோடி ரூபா

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேச [illegible] 297 கோடி ரூபாவை [illegible] உலக வங்கி [illegible] இந்த நிதி [illegible] வீதத்தில் நீண்டகாலக் கடனாக வழங்கப்பட இருக்கின்றது.

[illegible], நீர் விநியோகம், புனரமைப்பு, மீள் குடியேற்றம் போன்ற [illegible] உள்ளூராட்சி [illegible] இந்தக் கடன் [illegible]. (ஐ)

## குழந்தை [illegible] பிறப்பு வீதம் [illegible]

இலங்கையில் [illegible] பிறப்பு வீதம் வீழ்ச்சி [illegible] தாக ஆய்வு ஒன்றில் [illegible] வந்துள்ளது.

ஆண்களில் ஏற்பட்டு [illegible] ணுக்களின் குறைவே இதற்கு [illegible] ணம் என ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் செறின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இவர் மேற்கொண்ட ஆய்வின் படி குழந்தைகள் அற்ற தொகை இலங்கையில் அதிகரித்து வருகின்றது. இதற்கு ஆண் உயிரணு எண்ணிக்கைக் குறைவே முக்கிய காரணம்.

அதேவேளை, சூழல் மாசுபடல், மனக்கவலை போன்ற காரணங்களினால் ஓமோன்களின் செயற்பாடு குறைவதும் ஒரு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## [illegible] செட்டிகுளத்தில் [illegible] பேரணி

[illegible],டிசெ.9

[illegible] நிலை [illegible] இன்று [illegible] மௌனப் [illegible] இடம் பெறவுள்ளது. [illegible] பிள்ளையார் [illegible] காலை 10 [illegible] பேரணி செட்டிகுளம் [illegible] செயலரிடம் மகஜர் கையளிப்பதுடன் முடிவடையும்.

[illegible] ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பேரணியின் முடிவில்போர் நிறுத்தக்கண் காணிப்புக்குழு, அரச அதிபர், ஜனாதி பதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு மகஜர்கள் கையளிக்கப் படவுள்ளன. (ஐ)

## ஆஸ்பத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பிரேத அறையை நிறுவுவதற்கு புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சு ஒரு கோடி ரூபாவை ஒதுக்கியிருக்கிறது. ஒதுக்கப்பட்ட நிதியில் அரைவாசிக்கும் கூடிய தொகை செலவழித்து முடிக்கப்பட்ட போதும், அதன் மூலம் கட்டடத்தின் அத்திபாரம் மட்டுமே அமைக்கப்பட்டிருப்பது தெரியவந்திருக்கிறது.

இந்தக் கட்டட வேலைகளை நேரில் சென்று பார்வையிட்ட புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள், கட்டடத்தை அமைப்பதற்காக ஒப்பந்தகாரரால் பெறப்பட்ட நிதியின் அளவுக்கும் தற்போதுவரை செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருப்பது கண்டு அதிர்ச்சி வெளியிட்டிருப்பது தெரிந்ததே. (ஐ)

## வீரப்பன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கர்நாடகாவில் வெளியிடப்பட்ட வீரப்பனின் ஒலிநாடா ஒன்றில் நாகப்பா காயமடைந்துள்ளார் என்ற தகவல் வெளியானதைத் தொடர்ந்து கர்நாடக பொலிஸார் காட்டில் பெரும் தேடுதல் வேட்டை ஒன்றை ஆரம்பித்தது என்று கூறப் படுகின்றது.

நாகப்பாவின் மரணம் தொடர்பான மர்மம் நீடிக்கும் அதேநேரம், அது கர்நாடக மக்கள் மத்தியில் பெரும் கோபவேசத்தை உருவாக்கியிருப்பதாக செய்திகள் தெரிவித் தன.

கடந்த ஒகஸ்ட் 25 ஆம் திகதி இரவு நாகப்பா அவரது வீட்டில் வைத்து வீரப்பனின் ஆள்களால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். அன்று முதல் அவரை விடுவிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தன. (ஐ-9)

*(முன்னர் வந்த செய்தி மூன்றாம் பக்கத்தில்)*

# துணைமருத்துவ ஊழியர் சங்கம் சுகாதார அமைச்சருடன் இன்று பேச்சு

துணைமருத்துவ ஊழியர் சங்கம் தனது உறுப்பினர்களின் பிரச்சினைகள் தொடர்பாக சுகாதார அமைச்சர் பி.தயாரத்னவுடன் இன்று பேச்சுக்கள் நடத்தவுள்ளது.

இது தொடர்பாக மத்தியஸ்தம் வகிக்கும்படி சுகாதார அமைச்சர் துணைமருத்துவர் சங்கஊடகப் பேச்சாளர் ரவி குமுதுவை எழுத்து மூலம கேட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

துணைமருத்துவ ஊழியர்கள் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தத்திற்கு மத்தியிலும் அவசர சேவைகளை வழங்கி வருகின்றனர். எனினும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆய்வுகூட சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என வைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவிததன. (ஐ)

## வானொலி ஒலிபரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லான பொலிஸ் குழுவின் பாதுகாப்புடன் கொழும்பிலிருந்து ஓமந்தைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. வழியில் சோதனைச் சாவடியில் படையினர் அந்த கொள்கலனை சோதனை செய்ய முற்பட்டபோது பொலிஸ் இன்ஸ்பெக்டர் அதற்கு அனுமதிக்கவில்லை. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தைக் காண்பித்தார். பின்னர் அந்தக் கொள்கலன் எதுவித சோதனைகளுமின்றி நவம்பர் 27 ஆம் திகதி இரவு 11.30 மணிக்கு வன்னிக்கு கொண்டுசென்று சேர்க்கப்பட்டது.

இந்த வானொலி உபகரணங்கள் நோர்வே தூதரகத்தினால் விடுதலைப் புலிகளுக்கு அன்பளிபாக வழங்கப்பட்டவை என்று தெரியவருகிறது. இவ்வாறு நோர்வேயினால் வழங்கப்பட்ட உபகரணங்களையே துறைமுகத்திலிருந்து வெளியேற்றுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது எனத் தெரிவிக்கிறது.

இந்த உபகரணங்கள் மூலம் எவ்.எம். அலைவரிசையில் ஒரு வரையறுக்கப்பட்ட இடப்பரிமானத்துக்குள் மட்டும்தான் ஒலிபரப்புச் சேவையை வழங்கமுடியும் என்று இராணுவத்தின செய்தித்தொடர்புகள் தொடர்பான தொழில்நுட்பவியலாளர்கள் கூறியதாக சுங்கப்பகுதி உயரதிகாரிகள் கூறினர். ஆயினும், உயர்ரக பூஸ்டர்களைப் பயன்படுத்துவதன்மூலம் இந்த உபகரணங்களின் ஒலிபரப்பு வலுவை இலங்கைக்கு வெளியேயும் விஸ்தரிக்க முடியும் என்று வேறு சில தொழில் நுட்பவியலாளர்கள் மூலம் தெரிய வருகிறது.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து இந்த உபகரணங்களை விடுவிப்பதற்கு முன்னர் அவற்றைத் தகுந்த முறையில் பாதுகாப்பு அதிகாரிகளால் பரிசிக்க வேண்டும் என்று அரசின் உயரதிகாரிகள் சுங்கத்திணைக்களத்துக்கு பணிபுரை விடுத்திருந்தினர் என்றும் தெரிவருகிறது.

இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சமாதான முயற்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையின் அடிப்படையில்தான் ஒஸ்லோப் பேச்சுக்களில் இணக்கம் காணப் பட்டுள்ளது.

இப்போது சாதகமான சமிக்ஞைகள் வந்துள்ள போதிலும் பேச்சுக்களில் இது ஆரம்ப கட்டமாகையால் இப்போது திட்டவட்டமாக எந்தக் கருத்தையும் வெளியிடமுடியாது.

பேச்சுக்களில் அரச குழுவில் இடம பெறும் மூன்று அமைச்சர்களில் ஒருவரான மிலிந்த மொறகொடவுடன் நான இந்த விடயம் பற்றி நிறையப் பேசியிருக்கிறேன். நடந்த விடயங்கள் 'பயனுள்ளவை; பிரகாசமானவை' என்று அவர் சொன்னார்.

இப்படித் தெரிவித்த இந்திய வெளியுறவுச் செயலாளர் ஓர் எச்சரிக்கையையும் விடுத்தார்.

இலங்கையின் இந்தச் சமாதான முயற்சி விடயத்தில் இப்பிராந்தியத்திலுள்ள வெளிநாடுகள் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளும் நிலை இருக்கிறது. இதில் இலங்கையும் இந்தியாவும் தங்கள் பரஸ்பர நலன்களையும் உணர்வுகளையும் கருதிற்கொள்ள வேண்டும். இதுவே அவருடைய எச்சரிக்கை.

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு வந்த வெளியுறவுச் செயலாளர் ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), புளொட் ஆகியவற்றின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோரையும் தனது 2 நாள் விஜயத்தின்போது சந்தித்துப் பேசவுள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் ஆகியோருடனும் இந்திய வெளியுறவுச் செயலாளர் விரிவான பேச்சுக்களை நடத்துவார்.

அண்டை நாடுகளுடனான உறவுகளைப் பலப்படுத்தும் வழமையான விஜயத்தை மேற்கொண்டே தாம் இலங்கைக்கு வந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். (ஐ-9)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டு வருகிறது.


ஜனாதிபதியின் ஆலோசகர் அனுரா பண்டாரநாயக்கா தலைமையில் தமிழகத்துக்குச் செல்லவுள்ள குழு, முதல்வர் ஜெயலலிதாவையும் மாநிலத் தலைவர்களையும் சந்தித்து இலங்கை நிலைமைகளை விளக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

மீண்டும் விற்பனைக்கு!

HERO HONDA

* CD 100 SS
* SPLEDOR
* PASSION
* DAWN
* TVS VICTOR

மேற்கூறிய மொடல் மோட்டோர் சைக்கிள் ஒன்றினைக் கொள்வனவு செய்வோருக்கு பிரயாண ஆடை ஒன்று, தலைக்கவசம் இரண்டு ஆகியன அன்பளிப்பாக வழங்கப்படும்.



இவற்றுடன்

LML SELECT II, HONDA SUPER CUB - C50, C90, MD90, YAMATOZ 90 என்பனவும் விற்பனைக்குண்டு.

அனைத்துக்கும் நாடவேண்டிய இடம்.

யசோ மோட்டோர்ஸ்

168, 165, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/25312)

வெளிவந்துவிட்டது

எழுதுவினைஞர், கிராமசேவை அலுவலர்

ஆகியவற்றுக்கான மாதிரி வினாக்கட்டமைப்பு

விலை 45

★ முற்றிலும் எதிர்பார்க்கும் மாதிரி வினாக்கட்டமைப்பு

By: P.KAMAL THASAN (B.A.(Cey),Dip.in.m.g.(eusl) Spl - Trd.(Com.)

யாழ்.,வன்னி சகல புத்தக சாலைகளிலும்

பருவகால வெளியீடுகள், பற்றுச்சீட்டைகள், புத்தகங்கள், அழைப்பிதழ்கள் ஆய்வுக்கட்டுரைகள், சான்றிதழ்கள், நினைவு மலர்கள் மற்றும் விளம்பர அன்பளிப்புப் பொருட்கள் முதலானவற்றை

கணனியில் வடிவமைத்து ஓவ்செற், ஸ்கிறீன் பிறின்டிங் மூலம் தரமாக செய்து பெற்றிடவும் மற்றும் பைன்டிங் வேலைகளுக்கும்

ராம் பிறின்ரேஸ்

51, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் நிறுவன விளம்பரங்களை கலண்டர்களில் நவீன முறையில் பதித்துப் பெற்றுக் கொள்ளலாம்

உங்களுக்கு என்ன பிரச்சினை?



சிவபால ஜோதிடர் ராஜகுருசாமி

தென்னிந்தியாவில் இருந்து முதல் முறையாக யாழ்ப்பாணம் வருகைதந்த ஜோதிடர்

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம் ★ பெயர்ராசி ★ திருமணப் பொருத்தம்

இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி

60/1 (112), TEMPLE ROAD(*NEAR ICRC*), JAFFNA.

T.P. 021-222-3804

(11490)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361.ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.